



ARAJ UNIVERSITY LIBRARY
DURAI-625021.

r 608

Number 165432

r loan from Acc-

hould be returned on or before
e date last marked below.

| No. of ember | Due Date | Reg. No. the memb |
|---|---|---|
| | | |

# தங்க நகரம்

DR. T. P. M. LIBRARY.
MADURAI KAMARAJ UNIVERSITY.

## அகிலன்

பாரி புத்தகப் பண்ணை
58. டி.பி.கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005

தங்க நகரம் (சிறுவர் கதை)

முதல் பதிப்பு : மார்ச் 1957
இரண்டாம் பதிப்பு : நவம்பர் 1959
மூன்றும் பதிப்பு : எப்ரல் 1961
நான்காம் பதிப்பு : ஜூன் 1979

விலை: ரூ. 3-00

THANGA NAGARAM
Stories for Children
by AKILON
© Akilon, 13, Kastian Beach Street,
Santhome, Madras-4.
Fourth edition: June 1979
12 pt. Letters with pictures
11.6 kg White Printing
Box board Binding
84 pages
18×12.5 cms
Artist : SAGAR
Prem Press
Porkkodi Veliyeedu
Sales Right
PAARI PUTHAKAP PANNAI
58, T. P. Koil Street
Triplicane, Madras-600 005
Price Rs. 3-00

அச்சிட்டோர் :
பிரேம் பிரஸ்
சென்னை-600 004

# முன்னுரை

குழந்தைகளுக்காகப் பத்திரிகைகள் நடத்திப் புத்தகங்கள் வெளியிட்டுப் பணி யாற்றியவர்களில் முக்கியமாகக் குறிப்பிடப் பட வேண்டிய ஒருவர் திரு. வே. சுப. நடேசன் அவர்கள்.

அந்தக் காலத்தில் சிறுவர்களுக்காக நான் எழுதிய கதைகளைத் தொகுத்து புத்தக உருவில் நல்ல முறையில் வெளியிட்டார் திரு. நடேசன். அந்த நல்ல உள்ளம் வாழ்க.

இந்நூலின் நான்காம் பதிப்பை நீண்ட கால இடைவெளிக்குப்பின் பாரி புத்தகப் பண்ணையார் வெளியிடுகிறார்கள். அவர் களுக்கு எனது நன்றி.

சென்னை
1, ஜூன், 1979

அகிலன்

DR. T. P. M. LIBRARY.
MADURAI KAMARAJ UNIVERSITY.

## உள்ளே...

1. தங்க நகரம் ... 5

2. வீரச் சிறுவன் ... 48

3. வெள்ளைக் காக்கை ... 55

4. சிவப்பு விளக்கு ... 63

5. கூண்டுக் குயில் ... 72

6. உயர்ந்த நண்பன் ... 76

★

DR. T. P. M. L
MADURAI KAMARAJ UNIVERSITY

# தங்க நகரம்

பொழுது பல பலவென்று விடிந்தது. எந்த ஊரில் அப்படி விடிந்தது என்று கேட்பீர்கள். தங்க நகரம் என்ற பெயருள்ள ஊரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அது ஒரு சிறிய ராஜ்யத்தின் தலை நகரம். அங்கேதான் அப்படிப் பொழுது விடிந்தது.

அது ஒரு அழகான காலைப் பொழுது.

ஊருக்கு வெளியே ஒரு பெரிய அரண்மனை. அந்த அரண்மனையைச் சுற்றிலும் பூந்தோட்டம் இருந்தது. அந்தத் தோட்டத்தில் இல்லாத பூச்செடிகளே இந்த உலகம் முழுவதிலும் இல்லை என்று சொல்லலாம். அத்தனை விதமான பூச்செடிகள்!

ரோஜா, முல்லை, மல்லிகை, சம்பங்கி இந்த மாதிரி பூக்களைத்தானே நீங்கள் பார்த்திருக்கிறீர்கள்? அந்தத் தோட்டத்துக்குள் நுழைந்தால் ஆயிரக்கணக்கான பூங்கொத்துக்களைப் பார்க்கலாம். ஆமாம், ஆயிரக்கணக்கான விதங்கள்.

சிவப்பு, பச்சை, ஊதா, மஞ்சள், வெள்ளை, நீலம் இப்படிப் பல நிறங்களில் அங்கே தினந்தோறும் பூச்

சொரியும். ஒரே பூவில் பற்பல வர்ணங்கள் சேர்ந்து குலுங்கும். அந்தப் பூக்களின் வாசனையோ சொல்லி முடியாது. 'கம்'மென்று எந்த நேரத்திலும் வீசிக் கொண்டேயிருக்கும்.

தோட்டத்துக்குள் நீங்கள் மட்டும் ஒருதரம் வந்து விட்டால், அப்புறம் உங்கள் பாடு யோகந்தான். நீங்கள் அந்த இடத்தைவிட்டுத் திரும்பியே வரமாட்டீர்கள். உங்களுக்கு அத்தனை விதமான அழகிய மலர்களையும் விட்டுப்பிரிய மனமே வராது. சாப்பாட்டையும், படிப்பையும், தூக்கத்தையும் மறந்து அங்கேயே இருந்துவிடலாம்போல் தோன்றும்.

வெள்ளை இதழில் ஊதாப் பொட்டுப் போட்டாற் போல் ஒரு பூங்கொத்து இருக்கும். அது உங்களை கண் கொட்டாது பார்ப்பதுபோல் தோன்றும். அந்தப் பூ காற்றில் அசையும்போது உங்களைப் பார்த்து அது சிரிப்பதாகவே தோன்றும். கடுகைவிடச் சிறிய பூக்களும் அங்கே உண்டு. உங்களைப்போல்— ஆமாம், உங்கள் உருவத்தைப்போல் பெரிய பூக்களும் அங்கே உண்டு.

இமயமலையிலே மலரும் பூ, ஆப்பிரிக்கா தேசத்து காட்டுப் பூ, இங்கிலாந்து தேசத்துக்குச் சொந்தமான தங்க ராணிப் பூ, பாரசீக தேசத்து அடுக்கு ரோஜா, ஜப்பான் மரங்களிலே குலுங்கும் நெருப்பைப் போன்ற அழகிய பூ—இப்படிப் பல பூக்களையும் நீங்கள் அந்தப் பூந்தோட்டத்திலே கண்டு மகிழலாம்.

இத்தனை விதமான பூக்கள் அந்தத்தோட்டத்துக் குள் எப்படி வந்தன? தங்க நகரத்தின் அரண்மனைக்


SAGAR

குள் மட்டும் இத்தனை தேசத்துப் பூக்களும் எப்படி மலர்கின்றன? யார் இவைகளை இங்கே கொண்டு வந்து வளர்க்கிறார்கள்? இந்தக் காலத்துப் பிள்ளை களாகிய நீங்கள்கூடக் கட்டாயம் இந்த மாதிரிச் கேள்விகளையெல்லாம் கேட்பீர்கள்.

தங்க நகரத்து ராஜா இருக்கிறாரே, அவருக்குப் பூ என்றால் உயிர். அவர்தான் இந்த ஏற்பாடெல்லாம் செய்தது. அரண்மனைப் பணத்தை எடுத்துக்கொண்டு உலகமெங்கும் சுற்றினார். தங்க நகரத்துக்குத் திரும்பி வந்தபோது ஒரு பெரிய தோட்டம் போடுவதற்கான சாதனங்களுடன் திரும்பி வந்தார். விதைகள், பதி யன்கள், கன்றுகள், கொடிகளுடன் வந்து சேர்ந் தார். அந்த ராஜாவின் பெயர் ராஜமார்த்தாண்டன். அவருடைய ராணியின் பெயர் கமலாவதி.

நமக்கு இப்போது ராஜாவும் முக்கியமில்லை; ராணி யும் முக்கியமில்லை. அவர்கள் இரண்டு பேருமே பெரிய வர்கள். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உண்டு. சந்திரன் என்ற ராஜகுமாரன்; மல்லிகா என்ற ராஜ குமாரி.

சந்திரனுக்குப் பத்துப் பன்னிரண்டு வயது இருக்கும்; மல்லிகாவுக்கு அவனைவிட இரண்டு வயது குறைவாக இருக்கும். இவர்கள் இரண்டு பேரும் உங் களைப் போன்ற சிறு குழந்தைகள்.

கதையின் ஆரம்பத்தில் பொழுது பலபலவென்று விடிந்ததென்று சொன்னேனல்லவா? அந்தக் காலைப் பொழுதில் அரண்மனைப் பூந்தோட்டத்தில் சந்திரனும்

மல்லிகாவும் ஓடிப்பிடித்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். இளஞ்சூரியனின் மஞ்சள் வெய்யில் அவர்களை தொட்டுத் தொட்டு விளையாடியது.

அவர்கள் அங்கே தோட்டத்துப் பூச்செடியில் பூவை மொய்க்க வரும் இரண்டு வண்ணத்திப் பூச்சிகளைப்போல் பறந்து திரிந்தார்கள். தேனீக்கள் மாதிரி சுறுசுறுப்பாக ஓடிப் பிடித்தார்கள்.

மல்லிகா கண்ணைப் பறிக்கக்கூடிய அழகில், ஒன்பது வர்ணங்கள் கலந்த பட்டுப் பாவாடை கட்டிக் கொண்டிருந்தாள். அதே பட்டில் மேல் சட்டையும் அணிந்திருந்தாள். அவளுடைய உடை துணியால் தைத்தது என்று சொல்ல முடியாது. அத்தனை அழகு! அந்தத் தோட்டத்துப் பூக்களால் ஒரு பாவாடையும் சட்யையும் தைத்தால் எப்படி இருக்கும்? அப்படி இருந்தது அவள் உடை.

ஆனல் சந்திரன் வெள்ளை 'சில்க்' துணியில் தைத்த மேல்சட்டையும் நிஜாரும் போட்டிருந்தான். இளம் வெய்யிலில் அது பளபளவென்று மினுமினுத்தது; தங்கத் தகடுபோல் டால் அடித்தது.

சற்று நேரம் கழித்து இருவரும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்தார்கள். சிறிது களைப்பாக இருந்தது. பேசாமல் சிரித்துக் கொண்டார்கள். உடனே நல்ல காற்று குளுகுளுவென்று அடித்து இருவருக்கும் களைப்பைப் போக்கியது. சந்திரன் திடீரென்று மல்லிகாவிடம் பேச ஆரம்பித்தான்.

"ஏன் மல்லிகா! உனக்கு இந்தத் தோட்டத்தையும் அரண்மனையையும் தவிர வேறு ஒன்றுமே தெரியாதே?"

"ஊஹூம்; தெரியாது, உனக்கு மட்டும் தெரியுமோ?"

"இல்லை; எனக்கும் தெரியாது! அதனால்தான் உன்னைக் கேட்டேன்."

"நீ பெரிய பிள்ளை. உனக்கே தெரியாவிட்டால் எனக்கு எப்படித் தெரியும்?"

சந்திரன் கொஞ்சம் யோசனை செய்தான். பிறகு, "நம்முடைய தங்க நகரத்தை நாம் ஒருதரம் சுற்றி வரலாமா? நமக்கெல்லாம் வயசாகிவிட்டது. இன்னமும் நாம் அரண்மனைக்குள்ளேயே இருக்கக்கூடாது. வெளியில் போய் நம்முடைய ஊரைப் பார்த்துவர வேண்டும்" என்றான்.

"எனக்கும் இந்த ஆசை ஏற்பட்டது. நான்கூட உன்னிடம் இதைச் சொல்லவேண்டும் என்றிருந்தேன். அப்பாவிடம் கேட்டுக்கொண்டு ஒருநாள் வெளியே போவோமா?" என்றாள்.

"ஓ! போவோம்; நாளைக்கே போவோம்" என்றான் சந்திரன்.

குழந்தைகளுக்கு அன்றைக்குத் திடீரென்று ஏற்பட்ட இந்த ஆசையால், பின்னால் என்ன ஏற்படப் போகின்றது என்று அவர்களுக்கே தெரியவில்லை.

ஊரைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் அவர்களுக்கு விநாடிக்கு விநாடி அதிகரித்துக் கொண்டே வந்தது.

தங்கள் தந்தையாரிடம் கேட்பதற்காக விரைந்து அரண்மனைக்குள் ஓடினார்கள். ஒருவரை யொருவர் முந்திக்கொண்டு, தாங்களே முதலில் கேட்க வேண்டு மென்ற துடிதுடிப்போடு ஓடினார்கள்.

அரண்மனைக் குழந்தைகளான சந்திரனுக்கும் மல்லிகாவுக்கும் ஊர் சுற்றிப் பார்ப்பதில் இவ்வளவு ஆவலா என்று கேட்பீர்கள்.

எல்லாக் குழந்தைகளுக்குமே இதில் உற்சாகம் உண்டு. அதிலும் அவர்கள் கூண்டுக் கிளிகளைப்போல் அந்த அரண்மனைக்குள்ளேயே வாழ்ந்தவர்கள். அங் கேயே வளர்ந்தவர்கள்.

அவர்களுக்கு அந்த அரண்மனையையும், தோட் டத்தையும் விட்டால் வெளிஉலகமே தெரியாது. தங்க நகரத்தைக்கூட அவர்கள் சரியாகப் பார்த்ததில்லை. அவர்களுக்கு என்ன தேவையாக இருந்தாலும் அது அரண்மனைக்கே வந்தது. பாடம் சொல்லிக்கொடுக்க ஆசிரியர்கள் அரண்மனைக்கு வந்தார்கள். சினிமாவோ நாடகமோ பார்க்க வேண்டுமென்றால், அரண் மனைக்குள்ளாகவே அது போட்டுக் காண்பிக்கப் பட்டது. காரில் கொஞ்சதூரம் போய்ச் சுற்றிவர விரும் பினாலும், அவர்கள் தோட்டத்துக்குள்ளேயே சுற்றி வந்தார்கள்.

* * * *

குழந்தைகள் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக்கொண்டு ஓடி வருவதை அரசர் கண்டார். அவர் காரணத்தைக் கேட்பதற்கு முன்பே சந்திரன் விபரம் கூறினன். அரசர் தயங்கினர்.

''நம்முடைய அரண்மனைக்குள் இல்லாதது எதுவும் நகரத்தில் கிடையாது. ஏன் வெளியே போக வேண்டும்?'' என்ருர் அரசர்.

பிறகு தம் குழந்தைகளின் பிடிவாதத்தைக்கண்டு மன்னர் ராஜமார்த்தாண்டன் இரண்டு பேருக்கும் அனுமதி அளித்தார். ஆனல் பத்திரமாக அவர்களை அழைத்து வருவதற்காக, அவர்களுடன் கூட ஒரு மெய்க்காப்பாளனையும் அனுப்பினர்.

இந்த மூன்று பேர்களும் அரண்மனைக் காரில் ஒய் யாரமாக வெளியே புறப்பட்டார்கள். புதிதாக அப் போதுதான் மேல்நாட்டிலிருந்து வாங்கிய மோட்டார் கார் அண்ணையும் தங்கையையும் சுமந்துகொண்டு 'ஜம்'மென்று அரண்மனையைவிட்டுக் கிளம்பியது.

அரண்மனை வாசலில் நின்ற காவற்காரர்கள் இந்த ராஜவம்சத்தின் குழந்தைகளுக்கு மரியாதை யுடன் கதவுகளைத் திறந்து வழிவிட்டார்கள்.

ஊருக்குள் கார் சென்றது. காரின் அடை யாளத்தைக் கண்டுகொண்ட நகர மக்கள் ஆனந்தத் தால் கைகளைத் தூக்கி ஆட்டினர்.

அரண்மனைக் கார் அல்லவா? ராஜாதான் வரு கிருர் என்று பலர் நினைத்தார்கள். ஜனங்களில் ஒரு

சிலர் பயத்துடன் காரைக் கண்டு ஒதுங்கினுர்கள். போலீஸ்காரர்கள் சில இடங்களில் காரைப் பார்த்த வுடன் ஜனங்களை ஓரமாகத் தள்ளிப் போகும்படி விரட்டினுர்கள்.

சந்திரனும் மல்லிகாவும் எல்லாவற்றையும் கவன மாகப் பார்த்தனர். கண்கள் சிமிட்டக்கூட அவர் களுக்குத் தோன்றவில்லை. கடைத் தெருக்கள், பெரிய பெரிய வீதிகள், சிறிய வீட்டு வரிசைகள் எல்லா வற்றையும் பார்த்தனர். ஆனுல், அரண்மனையைப் போல் அத்தனை பெரியதாக அவர்கள் ஒரு வீட்டைக் கூடப் பார்க்கவில்லை! அந்தத் தோட்டத்தைப் போலவும் வேறு ஒரு தோட்டத்தைப் பார்க்கவில்லை.

''திரும்பிப் போகலாமா துரைராஜ்?'' என்று செல்லமாக மெய்க்காப்பாளன் சந்திரனைக் கேட்டான். துரைராஜ் என்றுதான் சந்திரனை எல்லாரும் அரண் மனையில் அழைப்பது வழக்கம்.

''அதற்குள்ளாகவா? வேண்டாம்! ஊர் முழுவதும் நான் மெதுவாகப் பார்க்க வேண்டும். டிரைவர், காரை மெதுவாகவிடு'' என்ருன் சந்திரன். கார் மெது வாய்ச் சென்றது. ஊரின் எல்லாத் தெருக்கள் வழி யாகவும் சென்றது.

சில தெருக்கள் மிக விகாரமாக இருந்தன. வெறும் கூரைக் குடிசைகளாக அந்தத் தெருவில் காணப் பட்டன. சாக்கடைகள் அந்தத் தெருக்களில் சுத்த மாக ஓடவில்லை. வழியெல்லாம் சாக்கடை நீர் வழிந்தது. நாற்றம் பொறுக்க முடியவில்லை.

இதையெல்லாம் கவனிக்காமல் அங்கே சின்னஞ் சிறு குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அநேக குழந்தைகளுக்குச் சரியான உடுப்புக் கிடையாது. பரட்டைத் தலையும், வற்றிய உடம்பும், சூம்பிய கை கால்களும் அவர்களில் ஒவ்வொருவருக்கும் இருந்தன.

''இவர்கள் எல்லாம் யார்?'' என்று கேட்டான் சந்திரன்.

''ஏழைக் குழந்தைகள்; குடியானவக் குழந்தைகள்'' என்றான் மெய்க்காப்பாளன்.

''ஐயோ, பாவம்!'' என்றாள் மல்லிகா.

''நம்முடைய ராஜ்யத்துக் குழந்தைகளா இப்படி இருக்கிறார்கள்? அப்பாவுக்கு இவர்களைப்பற்றித் தெரியுமோ?'' என்றான் சந்திரன். ''தெரியும்'' என்றான் மெய்க்காப்பாளன்.

''தெரிந்தால் ஏன் இவர்களுக்கு அவர் ஒன்றும் வாங்கிக் கொடுக்கவில்லை? எனக்கும் மல்லிகாவுக்கும் மாத்திரம் எல்லாம் செய்கிறாரே?'' என்று கேட்டான் சந்திரன்.

மெய்க்காப்பாளன் 'கம்'மென்று வாயை மூடிக் கொண்டு இருந்துவிட்டான். அவனுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

காரை ஒரு இடத்தில் நிறுத்தச் சொல்லி இறங்கினான் சந்திரன். மல்லிகாவும் அவனுடன் இறங்கினாள்.

அவன் நிறுத்தச் சொல்லிய இடம் ஒரு பாழடைந்த சத்திரம். அந்தச் சத்திரத்தில், 'மகாராஜாதி ராஜமார்த்தாண்ட பூபதி அவர்களின் தர்மசத்திரம்' என்று பெரிய 'போர்டு' போட்டிருந்தது. அதைச் சுற்றிலும் மனிதர்கள் கூட்டமாகக் கூடியிருந்தார்கள்.

ஆனால், அங்கு கூடியிருந்த மக்களுக்கும், ஊருக்குள் சந்திரன் பார்த்த மனிதர்களுக்கும் மிகவும் வித்தியாசம் இருந்தது. அங்கு இருந்த மனிதர்கள் மனிதர்களாகவே இல்லை. மிகவும் பரிதாபகரமாக இருந்தார்கள்.

பழைய பிடாரியம்மன் கோயில்களில் மண்ணால் செய்யப்பட்ட உருவங்களைப் பார்த்திருக்கிறீர்களா? மரத்தடிகளில் நூற்றுக்கணக்காய் மண் விக்கிரகங்கள் இருப்பதைக் கண்டிருக்கிறீர்களா? கண்ணில்லாத உருவங்கள், காதுபோன பொம்மைகள், கையொடிந்த மதலைகள், நொண்டியான சாமிகள் இவை இருக்கின்றன அல்லவா? இதைப் போன்ற மனித உருவங்கள் அந்தச் சத்திரத்தில் நூற்றுக் கணக்கில் இருந்தன.

அங்கே கால்போன நொண்டிகள் இருந்தார்கள்; கையில்லா முடவர்கள் இருந்தார்கள்; கண்ணில்லாக் குருடர்களும், வாய்பேசா ஊமைகளும் இருந்தார்கள்.

இவர்களைத் தவிர இன்னும் பசியால் மெலிந்தவர்களும், நோயால் வாடிய மனிதர்களும் காணப்பட்டார்கள்.

சத்திரத்தில் சோறுபோடும் நேரம் வந்தது. ஒருவர் மேல் ஒருவர் விழுந்தடித்துக் கொண்டு சோற்றை வாங்கினர்கள். ஆளுக்கு ஒரு பிடி சோறு. அதை வாங்குவதற்காக அவர்கள் பட்டபாடு! அடடா! சொல்லி முடியாது.

சத்திரத்தின் வேலைக்காரர்கள் சோறு போட்டுக் கொண்டே அவர்களைக் கண்டபடி திட்டினர்கள்; வைதார்கள்; அடித்தார்கள்; பிடித்துத் தள்ளினர்கள். ஒரு சிலருக்கு ''இல்லை, போ!'' என்று ஒன்றும் போடாமல் விரட்டியடித்தார்கள்.

இதையெல்லாம் கண்ட சந்திரனுக்கும் மல்லிகாவுக்கும் தாங்க முடியாத வருத்தம். சந்திரனுடைய கண்களில் நீர் துளிர்த்தது. மல்லிகாவோ இந்தக் காட்சியைக் கண்டு சகிக்காமல் அழுதாள்.

''நீங்கள் இந்தப் பக்கம் வந்திருக்கக்கூடாது. ராஜாவுக்குத் தெரிந்தால் என்னைக் கோபித்துக்கொள்வார்'' என்று மெய்க்காப்பாளன் முணுமுணுத்தான்.

இந்தச் சமயத்தில் காரை நோக்கி ஒருவன் பயங்கரமாக அலறிக்கொண்டே, வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு ஓடிவந்தான்.

அவன் கண்களில் ஆத்திரம் பொங்கியது. அவன் பார்ப்பதற்கு மனிதனைப் போலவே தோன்றவில்லை. அவனுடைய கந்தலின் கிழிசல்கள் காற்றிலே படபடத்தன.

''ஐயா! ஐயா!'' என்று அவன் காருக்குப் பக்கத்தில் அலறிக்கொண்டு வருவதைக் கண்டவுடன் டிரைவர் காரைக் கிளப்பிக்கொண்டு புறப்பட்டான்.

இதைக் கண்ட பிறகும் அவன் நிற்காமல் காருக்கு பின்னால் தட்டுத் தடுமாறிக்கொண்டு ஓடிவந்தான்.

''நிறுத்து காரை!'' என்று உரக்கக் கத்தினான் சந்திரன்.

காரை நிறுத்தாவிட்டால் சந்திரன் ஓடும் காரிலிருந்து கீழே குதித்துவிடுவான்போல் தோன்றியது. டிரைவர் நிறுத்தினான்.

சந்திரனும் மல்லிகாவும் காரைவிட்டு இறங்கினார்கள். அருவருப்பு நிறைந்த அந்த மனித உருவத்தைக் கண்டவுடன் அவர்களுக்கு அசூயை ஏற்படவில்லை. இரக்கமே பிறந்தது. அவனும் மனிதன் தானே?

அரண்மனைக் காரை நோக்கி வேகமாக ஓடி வந்தவன் ஒரு நொண்டிப் பிச்சைக்காரன்.

''ஐயா! எனக்குச் சத்திரத்திலே சோறு இல்லேன்னு சொல்லீட்டாங்கையா!'' என்று ஆத்திரத்தோடு கத்திவிட்டு, ''ஒரு காலணாக் கொடுங்கையா'' என்று தன் இடது கையை நீட்டினான் அவன். வலது கை முழங்கை வரையிலும் தனியே தொங்கியது.

''இரு, கொடுக்கிறேன்'' என்று சொல்லிவிட்டுத் தன் சட்டைப் பையிலிருந்து ஒரு வெள்ளி ரூபாயை எடுத்து நீட்டினான் சந்திரன்.

அதை அந்தப் பிச்சைக்காரன் வாங்கிக்கொள்ளவில்லை. பயந்தபடியே திரும்பிப் போகப் பார்த்தான். காலணாவுக்குப் பதில் வெள்ளி ரூபாயை வாங்கிக்

கொண்டால், காரிலிருக்கும் பெரியவர்கள் பிச்சைக் காரனைத் திருடன் என்று சொல்லிவிடுவார்களே!

இதற்குள் சத்திரத்துச் சோற்றை வாங்கிக் கொண்ட மற்றொரு கிழவி அந்தப் பக்கம் வந்தாள். அவள் கையிலிருந்த சோறு கால் வயிற்றுக்கே போதாது.

ரூபாயை நொண்டியிடம் வற்புறுத்திக் கொடுத்து வீட்டுக் கிழவியின் பக்கம் திரும்பினான் சந்திரன். அவ ளுடைய ஆகாரம் அவன் கண்களில் பட்டது.

''இதற்குமேல் உனக்குப் போடமாட்டார்களா?'' என்று கிழவியிடம் கேட்டான்.

''மாட்டார்கள்'' என்றாள் பிச்சைக்காரக் கிழவி.

''உனக்குப் போதுமா இந்தச் சாதம்?''

''போதாது!''

''வேறே என்ன செய்வாய்?'' என்றான் ராஜ குமாரன்.

''ஊருக்குள்ளே பிச்சையெடுப்பேன். கிடைத் தாலும் கிடைக்கும். கிடைக்காவிட்டால் இத்துடன் படுத்துக் கொள்வேன். வர வர ஜனங்கள் மனசு கல் லாய்ப் போய்விட்டது. யாருமே எங்களைக் கண்டு இரக்கப்படுவதில்லை'' என்றாள்.

''இந்த வாழ்க்கை உனக்கு ரொம்பக் கஷ்டமா யிருக்குமே!''

''ஆமாம், ரொம்பக் கஷ்டந்தான். சாகலாம் என்றுகூடத் தோன்றும்.''

''ரொம்பக் கஷ்டமென்ருல், எப்படிக் கஷ்டப்படு வாய்?'' என்று வருத்தத்துடன் கேட்டாள் மல்லிகா.

பிச்சைக்காரக் கிழவி மல்லிகாவைப் பார்த்துக் கவலேயோடு சிரித்தாள். அவள் ஒன்றும் பேசவில்லே. ஆனுல், அவளுக்குப் பதிலாக அந்த நொண்டி பேசினுன்.

''ஏழைகளின் கஷ்டத்தை எப்படி அம்மா வாய் விட்டுச் சொல்லமுடியும்? அப்படிச் சொன்னுலும் அது உங்களுக்குப் புரியாது. பணக்காரங்களுக்கு அது சொல்லித் தெரிகிற விஷயமில்லே. எனக்குத்தான் அது தெரியும். நான் இரவும் பகலும் அதை அனுபவிக் கிறேன். ஏழையாக இருந்தால்தான் அந்தக் கஷ்டம் உங்களுக்குப் புரியும்'' என்ருன் அவன்.

''உங்களுக்கு அந்தக் கஷ்டம் வரவே வேண் டாம். நீங்க மகாராஜாக்களா இருக்கணும்'' என்ருள் அந்தக் கிழவி. அவர்கள் அரண்மனேக் குழந்தைகள் என்பது அவளுக்கோ, அவனுக்கோ தெரியாது.

இரு குழந்தைகளின் கண்களிலும் கண்ணீர் வந்துவிட்டது. சட்டைப் பைக்குள் கையைவிட்டு மற் ருெரு வெள்ளிக்காசை எடுத்துக் கிழவியிடம் நீட்டினுன்.

உடனே சத்திரத்திலிருந்த எல்லாக் கூட்டமும் காரின் பக்கம் திரும்பியது. இருந்த காசையெல்லாம் எடுத்துச் சந்திரனும் மல்லிகாவும் எல்லோருக்கும் கொடுத்துவிட்டார்கள். தீர்ந்து போன பிறகு காரை அரண்மனேக்கு விடச்சொன்னுன் சந்திரன்.

கார் அரண்மனை திரும்பும்போது இருவர் முகமும் அதிகமாக வாடியிருந்தது. ஒருவரை யொருவர் பார்த்து வழக்கம்போலச் சிரித்துக்கொள்ளவில்லை. மல்லிகா கண்களைக் கைக்குட்டையால் அடிக்கடி துடைத்துக்கொண்டாள். சந்திரனின் கண் சிவப்பு ரோஜாபோல் ரத்தமாய் இருந்தது.

அவர்கள் நினைத்தார்கள் : ‘நம்மைப் போலவே எல்லோரும் இல்லை. அரண்மனைக்கு வெளியே குடிசைகள் இருக்கின்றன; சாக்கடை நாற்றம் இருக்கிறது; கபோதிகளும், நொண்டிகளும், குஷ்டரோகிகளும், பசியால் வாடியவர்களும் இருக்கிறார்கள். சத்திரத்துச் சாப்பாடு அவர்களைச் சாகவும் விடாமல் பிழைக்கவும் விடாமல் அந்தரத்தில் ஆட்டி வைக்கிறது.’

இப்படி அவர்கள் நினைத்துக்கொண்டிருந்தபோது அரசர் ராஜமார்த்தாண்டனிடம் மெய்க்காப்பாளன் அன்றைக்கு நடந்ததையெல்லாம் கூறினான்.

சந்திரனும் மல்லிகாவும் கண்ட இடத்துக்கெல்லாம் காரை ஓட்டச் சொன்னதுபற்றிப் புகார் செய்தான். ஏழைகள் வசித்த தெருவுக்கும், சத்திரம் சாவடிகளுக்கும் அரண்மனைக் கார் போய் வந்தது என்றான். சத்திரத்தில் அண்ணனும் தங்கையுமாகச் சேர்ந்து கையிலிருந்த காசையெல்லாம் தானம் செய்ததுபற்றிக் குறை கூறினான்.

‘‘இப்படியெல்லாம் நீங்கள் செய்யலாமா? இதற்காகத்தானா வெளியே போகவேண்டுமென்று பிடிவாதம் செய்தீர்கள்? நம்முடைய கௌரவத்துக்குத்

தகுந்தாற்போல நாம் நடந்துகொள்ள வேண்டாமா?'' என்று மகாராஜா வருத்தப்பட்டுக்கொண்டார்.

சந்திரனும் மல்லிகாவும் அவரிடம் ஒன்றும் பதில் சொல்லவில்லை. பேசாது இருந்துவிட்டார்கள். ஆனுல் அவர்களுக்கு ஊரைச் சுற்றிப் பார்த்ததிலிருந்து என்னவோ போல் கவலையாக இருந்தது. எந்நேரமும் அந்தத் தெருக்களின் நினைவும், சத்திரத்தின் ஞாபகமுமாகவே அவர்கள் இருந்தார்கள்.

அவர்கள் முன்போலக் கலகலப்பாக விளையாடுவதில்லை. வாய்விட்டுச் சிரிப்பதில்லை. ஓடிப்பிடித்து ரகளை செய்வதில்லை. பேசாது புல் தரையில் உட்கார்ந்து யோசனையில் முழுகிவிடுவார்கள். இரண்டு பேருக்கும் எப்போதுமே பலத்த யோசனைதான். அரண்மனைச் சுவருக்கு வெளியே இருக்கும் தங்களுடைய தங்க நகரத்தைப் பற்றிய யோசனை.

அவர்கள் இப்படித் திடீரென்று மாறிப்போனது ராஜமார்த்தாண்டனுக்கும் ராணி கமலாவதிக்கும் அதிகக் கலக்கத்தைக் கொடுத்தது. அளவுக்கு அதிகமாகக் குழந்தைகளிடம் செல்லம் காண்பித்தார்கள். ''ஏன் இப்படி இருக்கிறீர்கள்?'' என்றும் கேட்டார்கள். ஆனுல் ஒன்றும் அவர்களுக்குப் புரியவில்லை.

இருந்தாலும் எப்படியோ ராஜா ஒருவிதமாக அவர்களைத் தெரிந்து கொண்டார். அண்ணனும் தங்கையும் பேசிக்கொள்வதைக் கவனிக்கும்படியாக ஓர் ஆளிடம் சொல்லியிருந்தார். அவன் வந்து விஷயத்தைக் கூறினுன். அவனுக்கு உள்ளூற நடுக்கம். அரசர் தன்னைக் கோபித்துக் கொள்வாரோ என்று

பயந்தான். ஆனால் நடந்ததைச் சொல்லாவிட்டாலும் அதுவும் விபரீதமாகப் போய்விடும் அல்லவா? ஆகவே அவன் நடந்ததைக் கூறிவிட்டான். "குழந்தைகள் சத்திரத்துப் பிச்சைக்காரர்களைப்பற்றிப் பேசினார்கள். அவர்களுக்குக் கொடுக்கும் சாதம் போதாது என்று சொல்லிக் கொண்டார்கள்" என்று ராஜாவிடம் சொன்னான்.

ராஜா தம் குழந்தைகள் இருவரையும் கூப்பிட்டார். "இதற்காகத்தானா நீங்கள் இப்படி இருக்கிறீர்கள்? நாளையிலிருந்து அவர்களுக்கு இரண்டு பங்கு சாதம் போடச் சொல்லி உத்தரவு போடுகிறேன்."

குழந்தைகள் முகத்தில் கொஞ்சம் சிரிப்பு வந்தது. "இருந்தாலும் அப்பா, அதுவும் அவர்களுக்குப் போதாதே!" என்றனர்.

"போதாதுதான்; என்ன செய்வது? அதற்கு மேலே போட நம்மால் முடியாது" என்றார் ராஜா.

ஒரு வாரம் கழித்து, ஒருநாள் மாலை சந்திரனும் மல்லிகாவும் தோட்டத்தில் உலவிக்கொண்டிருந்தார்கள்.

"மல்லிகா! தோட்டத்தில் உள்ள பறவைகளையும் வண்ணாத்திப் பூச்சிகளையும், அணில்களையும் பார்க்கும் போது உனக்கு ஆனந்தமாக இருக்கிறதல்லவா?" என்று கேட்டான் சந்திரன்.

"ஆமாம்" என்றாள் அவள்.

"ஏன் தெரியுமா?"

"ஏன்?"



''இந்தப் பிராணிகளில் ஏழைப் பிராணிகள் என்றும், கஷ்டப்படும் பிராணிகள் என்றும் கிடையாது.''

''காரணம் தெரிந்தது, அண்ணு!'' என்று நீண்ட பெருமூச்சு விட்டாள் மல்லிகா.

பிறகு சந்திரன் அவளைத் தன் அருகே அழைத்து அவள் காதோடு காதாக ஒரு ரகசியத்தைக் கூறினுன். அதைக் கேட்டவுடன் மல்லிகாவின் தேகமே நடுங்கியது.

''மல்லிகா! இந்த ரகசியத்தை யாரிடமும் சொல்லாதே! அப்பா அம்மாவுக்குக்கூடத் தெரியக்கூடாது'' என்ருன்.

அவன் சொல்லிய சொல்லை நினைத்துப் பார்க்கவே மல்லிகாவுக்குப் பயமாக இருந்தது.

சந்திரன் மல்லிகாவின் காதோடு காதாகச் சொல்லிய ரகசியம் என்ன தெரியுமா? எந்தச் சொல்லைக் கேட்டுவிட்டு மல்லிகா அப்படிப் பயந்து நடுங்கினுள் தெரியுமா?—

''நான் ஏழையாகப் போகிறேன்!'' என்ருன் சந்திரன்.

இதைக் கேட்டபோதுதான் மல்லிகாவின் தேகமே நடுங்கியது. அரண்மனையில் வளர்ந்த ராஜ குமாரன் ஏழையாகப் போவதா! ஏழைகள் படும் எத்தனையோ அவதிகளை மல்லிகாவும் கண்கூடாகப் பார்த்து வந்தவளாயிற்றே!

வேண்டாம் என்று அவள் தன் அண்ணனைத் தடுத்துப் பார்த்தாள். அவன் கேட்கவில்லை. பிறகு

''எப்படி நீ ஏழையாகப் போவாய்? எதற்காக நீ ஏழையாகப் போகவேண்டும்?'' என்று கேட்டாள்.

''ஏழைகளின் கஷ்டத்தைத் தெரிந்துகொள்ளப் போகிறேன்'' என்று பதிலளித்தான் சந்திரன்.

''நாம்தான் ஒரே நாளில் பார்த்துத் தெரிந்து கொண்டோமே'' என்றாள்.

''பார்த்துத் தெரிந்துகொண்டால் போதாது மல்லிகா! அந்த நொண்டிப் பிச்சைக்காரன் பேசியதை நீ கேட்டாயா? பார்த்தால் போதாது; அனுபவித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். ஏழையாக மாறினால் தான் ஏழையின் துன்பம் தெரியுமாம்!''

''அப்படியானால் நானும் உன்னோடு ஏழையாக மாறுவேன்'' என்று பிடிவாதம் பிடித்தாள் மல்லிகா.

''ஊஹும்; வேண்டாம்; நீ என்னைவிடச் சிறியவள். அதிலும் பெண்'' என்றான்.

''அதெல்லாம் முடியாது; பெண்ணென்றால் என்ன? நானும் உன் கூடவே எப்போதும் இருப்பேன். பெண்களும் ஏழைகளாய் இருக்கிறார்களல்லவா? அந்தப் பிச்சைக்காரக் கிழவியை என்னால் மறக்கவே முடியவில்லை.''

சந்திரனால் அவன் தங்கையின் பேச்சைத் தட்ட முடியவில்லை. அதனால் மெதுவாக அவளிடம் தன் ரகசியத் திட்டத்தை விளக்கிக் கூறினான். அந்த ரகசியம் அப்படி ஒன்றும் பிரமாதமானதில்லை.

இதுதான் அவன் திட்டம்: அரண்மனையைவிட்டு ஒருநாள் காலை மெதுவாக வெளியே போய்விடுவது.

வெளியே போன பிறகு, பிச்சைக்காரன் மாதிரிவேஷம் போட்டுக்கொள்வது. அந்த ஒருநாள் முழுவதும் பிச்சை எடுப்பது; கஷ்டத்தைத் தெரிந்துகொள்வது. பிறகு சாயங்காலம் உடுப்பை மாற்றிக்கொண்டு அரண் மனைக்கு வந்துவிடுவது.

இதைக் கேட்ட மல்லிகாவுக்குப் பயமெல்லாம் பறந்துபோய்விட்டது.

''நீ பிச்சைக்கார அண்ணு! நான் பிச்சைக்காரத் தங்கை! சரிதானே?'' என்று தன் கழுத்தை வளைத்துக்கொண்டு கேட்டாள் மல்லிகா.

''தாராளமாய் நீயும் வந்து கஷ்டப்படு!'' என்று சிரித்தான் சந்திரன். மல்லிகா அளவு கடந்த மகிழ்ச்சி யால் அப்படியே தன் அண்ணனைக் கட்டிக் கொண்டாள்.

அப்பாவுக்கும் அம்மாவக்கும் நிறைய வேலை இருக்கும் ஒருநாளில் இருவரும் புறப்படத் தீர்மானித் தார்கள். தோட்டத்தில் இருப்பதாகப் போக்குக் காட்டிப் பிறகு போய்விட வேண்டுமென்பது திட்டம். அதற்கான பழந்துணிகளையும் சேகரித்துவிட்டான் சந்திரன். பிச்சையெடுப்பதற்கு இரண்டு பழைய தகரக் குவளைகளையும் எங்கிருந்தோ கொண்டு வந்தான்.

ஒருநாள் அதிகாலை இரண்டு குழந்தைகளும் மெதுவாக அரண்மனையைவிட்டு நழுவினர்கள். காவல் காரன் எங்கோ பராக்குப் பார்த்துக்கொண்டிருந்தான். அதுதான் சமயம் என்று சந்தடி செய்யாமல் வெளியே

வந்தார்கள் இருவரும். வெளியே வந்த பிறகு இரு வருடைய நெஞ்சுகளும் ‘படக் படக்’கென்றுஅடித்துக் கொண்டன. காரணமில்லாத பயம் இவர்களைப் பிடித்துக்கொண்டது.

மெதுவாக ஒரு மறைவான இடத்துக்கு வந்தார் கள். தங்களுடைய உடுப்புகளைக் கழற்றினார்கள். பழந் துணிகளைக் கட்டிக்கொண்டார்கள். ஒரு அழுக்குத் துணியில் இருவருடைய உடுப்புகளையும், நகை களையும் மூட்டையாகக் கட்டினார்கள். அந்த மூட்டை யையும் தகரக் குவளையையும் எடுத்துக்கொண்டு தெருப்பக்கம் கிளம்பினார்கள்.

‘‘அது சரி, நமக்குப் பிச்சை எடுக்கத் தெரி யாதே! என்ன சொல்லிப் பிச்சை கேட்பது?’’ என்றாள் மல்லிகா.

சந்திரனுக்கும் அப்போதுதான் அந்தக் கஷ்டம் இருப்பது தெரிந்தது.

‘‘கொஞ்சநேரம் இந்தத் தெருவில் இருந்து மற்றப் பிச்சைக்காரர்களைப் பார்ப்போம். அவர்கள் கேட்பதுபோல் நாமும் கேட்டால் போகிறது’’ என்றான் சந்திரன்.

பிச்சைக்காரர்கள் வந்தார்கள்; வீடுவீடாய்ப் பிச்சை கேட்டுப் போனார்கள். அநேகமாக அதிகம் பேர் விபூதியையாவது நாமத்தையாவது உடம்பில் பூசிக் கொண்டிருந்தார்கள். சந்திரனுக்குக் கொஞ்சம் விபூதி கிடைத்தது. அதை இரண்டுபேரும் பட்டை பட்டையாப் பூசிக்கொண்டார்கள்.

சந்திரன் மல்லிகாவுக்குச் சொல்லிக் கொடுத்தான். சந்திரன் சொல்லச் சொல்ல மல்லிகாவும் பின்னுல் சொன்னுள்.

சந்திரன் : அம்மா, தாயே!

மல்லிகா : அம்மா, தாயே!

சந்திரன் : பிச்சை போடுங்கோ!

மல்லிகா : பிச்சை போடுங்கோ!

சந்திரன் : உங்களுக்கு ரொம்பப் புண்ணியமாப் போகும்; ஏழை முகம் பாருங்க. சாப்பிட்டு ரெண்டு நாளாச்சு. அம்மா தாயே...அன்னலட்சுமி!

மல்லிகாவும் அப்படியே சொல்லிவிட்டுச் சிரித்தாள். ''சாப்பிட்டு ரெண்டு நாளாச்சு என்று பொய் சொல்லலாமா அண்ணு?'' என்று கேட்டாள்.

''சிரிக்கக்கூடாது மல்லிகா! சிரித்தால் யார் நமக்குப் பிச்சை போடுவார்கள்? ஏழைகளெல்லாம் இப்படிச் சிரிக்கமாட்டார்கள் தெரியுமா? நாம் பொய் சொல்லவில்லே. நடிக்கிருேம்'' என்ருன் சந்திரன்.

பிறகு இரண்டு பேரும் வீடு வீடாய் அலேந்தார்கள். சந்திரன் முதலில் தன்னுடைய ''அம்மா தாயே!'' என்னும் பாடத்தை ஆரம்பித்தான். மல்லிகா அதை முடித்தாள்.

இரண்டு மூன்று தெருக்கள் அலேந்த பிறகும் யாரும் பிச்சை போடவில்லே. இருவருக்கும் கோபமும் அழுகையும் ஆத்திரமும் வந்தன; என்ருலும் அடக்கிக் கொண்டார்கள்.

கடைசியாக ஒரு வீட்டில் ‘‘என்ன வாங்குறே? அரிசியா? பழைய சோறு?’’ என்று ஒரு பெண் கேட்டாள். அப்போதுதான் என்னத்தை வாங்குவது என்று சந்திரன் நினைக்க ஆரம்பித்தான்.

அதற்குள் அந்த வீட்டுக்காரி ஒரு கிண்ணத்தில் பழைய சோற்றை எடுத்து வந்து மடமடவென்று மல்லிகாவின் குவளையில் கொட்டிச் சென்றாள். பழைய சோற்றை இதற்கு முன்பு அவர்கள் கண்ணால்கூடக் கண்டதில்லை! சரியாக அதை வாங்கத் தெரியாது கீழே கொஞ்சம் கொட்டிவிட்டாள் மல்லிகா. அதைக் கண்டதும் அந்த வீட்டுக்காரிக்குக் கடும் கோபம் வந்தது. அதற்காக அவளைத் திட்டிக்கொண்டே உள்ளே சென்றாள்.

உச்சிப் பொழுதாகி விட்டது. அவர்களுக்கு அந்த சோற்றைத் தவிர வேறு எதுவும் கிடைக்கவே இல்லை. கால்கள் வலி எடுக்க ஆரம்பித்தன. வெயிலால் உடம்பெங்கும் எரிந்தது. மயக்கம் வரும்போல் இருந்தது.

பசியால் வாடிக் களைத்துச் சோர்ந்து போன மல்லிகாவும் சந்திரனும் நேரே சத்திரத்திற்குப் போய்க் கொஞ்சம் நிழலில் தங்கினார்கள். பிறகு சாப்பாட்டு வேளை வந்தது. கூட்டமும் கூடியது. சோறு போடத் தொடங்கியவுடன் நெருக்கி அடித்துக்கொண்டு ஒருவர் மேல் ஒருவர் விழுந்தடித்துக்கொண்டு ஓடினார்கள்.

சந்திரனும் மல்லிகாவும் அவர்களைப் பார்த்தனர்.

நொண்டிகள், முடவர்கள், குருடர்கள், ஊமைகள், நோயாளிகள், பசியால் மெலிந்தவர்கள், இப்படி எத்தனையோ பேர் அந்தக் கூட்டத்தில் இருந்தார்கள்.

இவர்கள் எல்லோருமே பிச்சைக்காரர்களாக அங்கே இருந்தார்கள். அவர்களிடையே பிச்சைக்காரக் கோலத்தில் ராஜகுடும்பக் குழந்தைகள் இரண்டு மிருந்தன!

பாவம்! அந்தக் குழந்தைகளுக்குத் தாங்கள் விளையாட்டாகச் செய்த முயற்சி, வினையாக மாறப்போகிற தென்பதைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை.

சத்திரத்துக்கு வந்து சேர்ந்த சந்திரனும் மல்லிகாவும், பிச்சைக்காரக் கூட்டத்தோடு இடித்துப் புடைத்துக்கொண்டு உள்ளே போகமுடியாமல் தவித்தார்கள். கடைசியில் எப்படியோ ஒரு வழியாக அவர்களுக்கும் சாப்பாடு கிடைத்தது. சாப்பாடா அது?

மொச்சைக் கொட்டைகள் மாதிரி சாதங்கள் பெரிதாக இருந்தன. மிளகாய்க் காரம் கண்களில் நீரை வருவித்தது. ஒரு பிடி சாதத்தில் ஐந்து கற்களுக்குக் குறையாது இருந்தன. அப்படியிருந்தும் அந்தச் சாப்பாடு இந்த இரண்டு குழந்தைகளுக்கும் போதவில்லை. ராஜமார்த்தாண்டன் சாப்பாட்டு அளவை இரண்டு பங்காக உயர்த்தி இருந்தாரல்லவா? அப்படி உயர்த்தி இருந்தும் அந்தச் சாப்பாடு மிகக் குறைவாகத்தான் இருந்தது. குழந்தைகளுக்கே பற்றவில்லையென்றால் அது எப்படிப் பெரியவர்களுக்குப் போதும்? எப்படித்தான் இந்தப் பிச்சைக்காரர்கள் காலந்தள்ளுகிறார்களோ!

சயங்கால நேரமாகிவிட்டது. கால் வலி இரண்டு பேருக்கும் பொறுக்க முடியவில்லை. பகல் பொழுதில் அலைந்த அலைச்சல் களைப்பாக இருந்தது. சத்திரத்து நிழலில் தங்களுடைய துணி மூட்டையையும் குவளைகளையும் வைத்துக்கொண்டு படுத்தனர். சற்று நேரத்தில் நல்ல தூக்கம் வந்துவிட்டது. அயர்ந்து தூங்கினார்கள்.

திடீரென்று வாரிச்சுருட்டி எழுந்தான் சந்திரன். பொழுதுசாய்ந்துவிட்டது. விளக்கு வைக்கும் வேளை. அவனுக்கு அரண்மனை நினைவு வந்தது. இந்நேரம் அவர்கள் இரண்டுபேரையும் காணாமல் எங்கெல்லாம் தேடுகிறார்களோ! அதிக நாழிகை ஆகிவிட்டதே! தெரு விளக்குகள் போட்டுவிட்டார்களே! அம்மாவும் அப்பாவும் என்ன பாடுபடுகிறார்களோ!

''மல்லிகா, மல்லிகா'' என்று தங்கையை எழுப்பினான் சந்திரன். கண்களைத் துடைத்துக்கொண்டே மல்லிகா எழுந்தாள். இத்தனை நேரமும் அவள் அப்பாவையும் அம்மாவையும் பற்றித்தான் சொப்பனம் கண்டுகொண்டிருந்தாள்.

அவளுக்கு உடனே அரண்மனைக்குப் போக வேண்டுமென்று தோன்றியது. பொழுது இருட்டிக் கொண்டு வந்தவுடன் அவளையறியாத பயம் அவளைக் கவ்விக்கொண்டது. எழுந்து சுற்றுமுற்றும் பார்த்தாள். கண்களைப் பல தரம் துடைத்துக்கொண்டு பார்த்தாள். பக்கத்தில் வைத்திருந்த துணி மூட்டையைக் காணோம்!

ஆமாம். அவர்களுடைய நகைகளும் உடுப்பும் வைத்துக் கட்டியிருந்த மூட்டையைக் காணேம்! யாரோ திருடிக்கொண்டு போய் விட்டார்கள்! அரண் மனை உடுப்புப் பறிபோய் விட்டது.

"அண்ணு, நீ பார்த்தாயா மூட்டையை?" என்று கேட்டாள் மல்லிகா.

"இல்லையே!" என்ருன் சந்திரன்.

"ஐயையோ! இனி நாம் என்ன செய்வது? எப்படி உள்ளே போவது?" என்ருள் மல்லிகா.

சந்திரனுக்கும் ஒன்றும் புரியவில்லை. பெரிய குழப்பமாக இருந்தது, ஏதோ பயங்கரமான ஆபத்தில் அவன் அகப்பட்டுக் கொண்டாத உணர்ந்தான். இருந்தாலும் தைரியத்தைக் கை விடவில்லை.

"வா போகலாம்; கவலைப்படாதே; நான் இருக் கிறேன்" என்று சொல்லி அவளை அழைத்துக் கொண்டு அரண்மனை வாசலை அடைந்தான். அப் போது நன்ருக இருட்டிவிட்டது. வாசற் பக்கத்துப் பெரிய விளக்குகள் சந்திரனைப்போல் பிரகாசித்தன.

இந்த இரண்டு 'பிச்சைக்கார'க் குழந்தைகளைக் கண்டவுடன் வாசல் பக்கம் துப்பாக்கியுடன் நின்ற காவற்காரன் முகத்தைச் சுளித்தான். அவனுக்குத் தமிழ் தெரியாது. அவன் வடக்கத்திப் பேர்வழி. நல்ல முரடன் "ஜாவோ!" என்று கோபமாய் உறுமினுன்.

"நாங்கள் ராஜா ராஜமார்த்தாண்டனின் குழந் தைகள்; எங்களை உள்ளே விடு" என்ருன் சந்திரன்.


SAGAR

அவனுக்குச் சந்திரன் பேசியது விளங்கவில்லை. தன்னிடம் துணிந்து பேசும் ஒரு ஏழைச் சிறுவனைக் காண அவனுக்குப் பிரமாதமான வெறி வந்துவிட்டது. தாறுமாறுக உளறினுன்; துப்பாக்கி முனையை நீட்டிப் பயமுறுத்தினுன். அதில் நீட்டிக்கொண்டிருந்த கத்தியால் சந்திரனைக் குத்திவிடுவான்போல் இருந்தது. மல்லிகா 'வீல்' என்று கத்திக்கொண்டு, ''வா, அண்ணு! இங்கே நிற்கவே வேண்டாம். நாம் எங்கே யாவது போவோம்!'' என்று சந்திரன் கையைப் பிடித்துப் பரபரவென்று இழுத்துக்கொண்டு போனுள். அவளுக்கு அழுகையை அடக்க முடியவில்லை. கோவென்று கதறிவிட்டாள். அவர்களுடைய சொந்த வீட்டுக்குள்ளே அவர்களால் போக முடியவில்லை. மேலே போடும் ஆடம்பரமான துணி இல்லாததால் அவர்கள் அங்கே நடுத்தெருவில் நின்றுர்கள்.

பசி, களைப்பு, மயக்கம், பயம் எல்லாம் சேர்ந்து கொண்டது. மல்லிகாவை மெதுவாகத் தன் தோள்மீது சாய்த்தபடியே சந்திரன் திரும்பவும் சத்திரத்துக்கு அழைத்துப் போனுன். அங்கு பகலில் மாத்திரம்தான் சாப்பாடு. இரவில் ஒன்றும் கிடையாது. இருந்தாலும் படுப்பதற்காகவாவது இடம் கிடைக்காதா என்று சென்றுன்.

ஆனுல், அந்த நேரத்தில் அங்கு ஒருவரையும் காணவில்லை. சத்திரத்துக் காவல்காரன் மட்டும் இருந்தான்.

''யாரது இங்கே வருகிறது? போங்கள். இங்கே ராத்திரியில் யாரும் படுக்கக்கூடாது. விளக்கு வைத்த

பிறகும் இங்கே உங்களுக்கு என்ன வேலை? போங்கள்!'' என்று கத்தினான்.

வேறு வழி? எங்கே போவது? இரவு நேரத்தை எந்த இடத்தில் கழிப்பது? யாரையாவது கேட்போமென்றாலும் ஒருவரும் தென்படவில்லை.

மேலே வானம் கருங்கும் என்றுஇருண்டுகொண்டு வந்தது. காற்று விர்விர் என்று சீறிக்கொண்டு சுழன்று சுழன்று வீசியது.

மின்னல் கண்களைப் பறித்தது.

வானம் 'கடபுடா திடுபுடும்' என்று சத்தம் போட்டுக்கொண்டு இடி முழங்கியது.

மழை 'சோ' என்று சத்தமிட்டுக்கொண்டு திடீரென்று மேகத்தைக் கிழித்துக்கொண்டு கொட்டியது.

மழையென்றால் மழை; மின்னலென்றால் மின்னல்; இடியென்றால் இடி; காற்றென்றால் ஒரே பேய்க்காற்று! அப்பாடா!

பிச்சைக்காரர்கள் வேஷத்தில் வந்து, இப்போது பிச்சைக்காரர்களாகவே ஆகிவிட்ட ராஜாவின் குழந்தைகள் அந்த மழையில் தெப்பமாக நனைந்துவிட்டார்கள்.

'எங்கே போய்த் தங்குவது?' என்ற கேள்வி மல்லிகாவின் மனத்தில் எழுந்தவுடன் அவள் 'கோ' வென்று வாய்விட்டுக் கதறி அழுதாள்.

மல்லிகா கதறி அழுததைக் கண்டு சந்திரன் மனம் கலங்கவில்லை. அவளைத் தேற்றி ஒரு ஆலமரத் தடிக்கு அழைத்துச் சென்றான். இரவு பத்துமணி

வரையில் மழை பெய்துகொண்டே இருந்தது. 'இந்த இருளிலும் மழையிலும் எங்கேபோய்த் தங்குவது' என்று சந்திரன் யோசிக்கத் தொடங்கினன்.

மல்லிகாவைப் பார்ப்பதற்குச் சந்திரனுக்குப் பரிதாபமாக இருந்தது. சந்திரனுக்காக அவள் அழுவதை நிறுத்திவிட்டாளென்றாலும், குளிராலும் பயத்தாலும் அவள் உடம்பு வெடவெடவென்று நடுங்கியது. சந்திரன் அவளை இறுகப் பிடித்துக்கொண்டான்.

மழை விட்ட பிறகு, இருவரும் மேல் துணியைப் பிழிந்து துவட்டிக்கொண்டு தெருக்களில் நடந்தார்கள். படுத்துக்கொள்ள ஏதேனும் இடம் கிடைக்குமா என்று பார்த்தார்கள். கடைசியில் ஒரு சிறிய திண்ணை கிடைத்தது. ஒட்டுத் திண்ணை. சரியாக ஒருவர்கூடப் படுக்க முடியாது. என்ன செய்வது? அந்த இடத்தில் ஒருவரோடொருவர் ஒட்டிக்கொண்டு இருவரும் படுத்தார்கள்.

தூக்கமே வரவில்லை. குளிரும் நடுக்கமும் நிற்கவில்லை. பயங்கரமான சொப்பனங்கள் இருவரையும் வாட்டின. பொழுது விடிவதற்குச் சற்று முன்னதாகவே எழுந்து அந்த இடத்தைவிட்டுக் கிளம்பினர்கள்.

''நாம் பிச்சைக்காரர்களாகவே போய்விட்டோமா அண்ணு? இனிமேல் அம்மா அப்பாவை நாம் பார்க்க முடியாதா?'' என்று கேட்டாள் மல்லிகா.

''பயப்படாதே மல்லிகா! கட்டாயம் பார்ப்போம். பிச்சைக்காரர்களைப் பார், எவ்வளவு சந்தோஷமாய் இருக்கிருர்கள்! நாம் மட்டும் ஏன் அதிகம் பயப்பட

வேண்டும்?'' என்றான். அவர்களைக் காணமல் அரண்மனையில் உள்ளவர்கள் தவித்த தவிப்பு அவர்களுக்குத் தெரியவில்லை.

அன்றைக்குக் காலையில் இருவருக்கும் கொஞ்சம் பழைய சாதம் கிடைத்தது. சாப்பிட்டார்கள். மத்தியானம் சத்திரத்து மொச்சைக்கொட்டை அரிசிச் சாதம். அதையும் சாப்பிட்டார்கள். நேற்றைவிட இன்று சாப்பாடு அவர்களுக்கு ருசியாக இருந்தது. ஏன் தெரியுமா? வயிற்றில் அகோரப் பசி. பசி அதிகமானல் ருசி தெரியாதல்லவா?

இதற்குள் தங்க நகரத்தில் ஜனங்கள் பரபரப்போடு பேசிக்கொண்டார்கள். ராஜாவின் குழந்தைகள் இரண்டு பேரையும் காணேமாம். கண்ட இடங்களிலெல்லாம் தேடுகிறார்களாம். போலீஸ்காரர்களும் சுறுசுறுப்பாக இருக்கிறார்களாம்.

ராஜாவும், ராணியும் தனித்தனியாகக் கார்களில் ஊரெங்கும் சுற்றுகிறார்களாம். வெளியூர்களுக்கும் ஆட்கள் தேடப் புறப்பட்டுவிட்டார்களாம்!

இவற்றையெல்லாம் கவனமாகக் கேட்டுக்கொண்டான் சந்திரன். அவனுக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது.

''அப்பாவும் அம்மாவும் நம்மைத் தேடுகிறார்களாம்! வா, நாம் அவர்களைத் தேடுவோம்'' என்று ஊருக்குள் நடந்தான்.

ராஜாவும் ராணியும் காரில் சுற்றிச் சுற்றித் தேடினார்கள். இங்கே பரட்டைத் தலையோடு, கந்தல் உடை

யோடு, பசி நிறைந்த வயிற்ருேடு, ஏழைக் கோலத்தில் இந்த இரண்டு பேரும் தெருத் தெருவாய்ப் பெற்ருேரைத் தேடினுர்கள்.

எதிரே அரண்மனைக் கார் வந்தால், நிறுத்தச் சொல்லித் தங்களை அழைத்துப் போகச் சொல்லலாம் அல்லவா? ஒருவேளை அம்மாவோ அப்பாவோ அதில் வந்தால் நேரில் சந்திக்கலாம் அல்லவா?

நல்லவேளை. நினைத்தபடி நடக்கப் போகிறது. அதோ, அந்தத் தெரு மூலையில் அரண்மனைக் கார் வருகிறது.

அன்றைக்கு அவர்களை ஏற்றி வந்த அதே கார் தான். புதிதாக வாங்கிய அது பளபளவென்று மின்னிக் கொண்டு வருகிறது.

மல்லிகாவுக்கு அளவுக்கு மீறிய ஆனந்தம். "அண்ணு! அதோ நம்முடைய கார்!" என்று அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டாள்.

சந்திரனுக்கும் தலைகால் புரியவில்லை. காரை நிறுத்தச் சொல்லிக் கையைக் காட்டிக்கொண்டே குறுக்கே போய் நின்ருன்.

வேகமாய் வந்த கார் படீரென்று நின்றது.

துள்ளிக் குதித்துக்கொண்டு இரண்டு குழந்தைகளும் கைகளை வேகமாக ஆட்டிக் கூப்பிட்டார்கள்.

ஆனுல் நின்ற கார் மறுபடியும் புறப்பட்டது! காருக்குள்ளிருந்து டிரைவர் தலையை நீட்டி, "பிச்சைக்காரக் கழுதைகளா! நடுரோட்டில் நின்ரு ஆட்டம்

போடுகிறீர்கள்? சனியன்கள்! விழுந்து சாகப் போகிறீர்கள். ஓடுங்கள்'' என்று கத்திவிட்டு மீண்டும் காரை வேகமாக ஓட்டினுன்.

அந்தக் காருக்குள் ராஜா ராணி இரண்டு பேர் களுமே இருந்தார்கள். இருவருமே இந்தக் குழந்தை களைப் பார்த்தார்கள். ஆனுல் அவர்களுக்குப் புரிய வில்லை. வெறுப்போடு பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டார்கள்.

எப்படி இருக்கும் சந்திரனுக்கு? என்ன பாடு பட் டிருப்பாள் மல்லிகா? பெற்ற தாயும் தந்தையுமே தங்களை அடையாளம் கண்டுகொள்ள முடியாத நிலையைக் கண்டதும் அவர்கள் இடிந்துபோய் விட் டார்கள். அவர்கள் மனத்தில் கொஞ்சநஞ்சம் இருந்த தைரியமும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது.

''ஐயோ, அப்பா!'' என்ருன் சந்திரன்,

''அம்மா! ஐயோ அம்மா!'' என்று அலறினுள் மல்லிகா.

அதற்குள் தெரு மூலையில் நின்ற ஒரு போலீஸ் காரன் தன்னுடைய கையிலிருந்த தடியை ஓங்கிக் கொண்டே இவர்களை நோக்கி ஓடிவந்தான்.

''ஓடுங்கள். நடுத்தெருவில் என்ன வேலை உங் களுக்கு?'' என்று தடியை வீசினுன். நல்லவேளை! இரண்டு பேரும் அடிபடாமல் தப்பினுர்கள்.

மல்லிகா தேம்பித் தேம்பி அழுதாள். ''அண்ணு! நம்மை யாருமே அடையாளம் கண்டுகொள்ளவில்லை.

நாம் இனிமேல் இந்தப் பொல்லாத ஊரில் இருக்க வேண்டாம். வேறு எங்கேயாவது போகலாமா?'' என்று கேட்டாள்.

''கவலைப்படாதே மல்லிகா! ஏழைகளின் ஒரு நாள் பொழுது எப்படிக் கஷ்டமாயிருக்கிறது பார்த்தாயா? தைரியமாக இரு'' என்று சாந்தப்படுத்தினன் சந்திரன்.

''ஏழைகளாயிருப்பதைவிட செத்துப் போவது தேவலாம் அண்ணு!'' என்ருள் மல்லிகா கண்கலங்க.

சந்திரனே இனிமேல் என்ன துன்பம் வந்தாலும் தான் அழுவதில்லை என்று தீர்மானித்தான். ''ஏழைகள் சாகமாட்டார்கள்; கோழைகள்தான் சாவார்கள்'' என்று கூறினன்.

சாயங்காலம் கடைத்தெருவில் தினசரிப் பத்திரிகைகளின் விளம்பரத் தாள்கள் தொங்கின. மக்கள் திரள் திரளாகக் குழுமி நின்று அந்தச் செய்தியைப் படித்தார்கள்.

அந்தக் கூட்டத்தில் நின்ற சந்திரனும் மல்லிகாவும் அச்செய்தியைப் படித்துத் திகைத்தனர்.

''ராஜ குமாரர் சந்திரனையும், ராஜ குமாரி மல்லிகாவையும் கொலைசெய்த கொலையாளி பிடிபட்டான். கொலை செய்யவில்லை என்று மறுக்கிருன். அவனிடம் குழந்தைகளின் நகைகளும் உடைகளும் அகப்பட்டன!'' என்று எழுதியிருந்தது.

''நம்மைக் கொலை செய்துவிட்டானு? யார்?'' என்ருன் சந்திரன்.

மல்லிகாவின் தலை சுற்றியது.

‘‘நாம் இப்போது உயிரோடு இருக்கிறோமா, இல்லையா?’’ என்று தன் அண்ணனிடம் கேட்டாள் மல்லிகா.

மல்லிகாவுக்கு ஏற்பட்ட விபரீதமான சந்தேகத்தைக் கேட்டவுடன் சந்திரன் விழுந்து விழுந்து சிரித்தான்.

‘‘ ‘நாம் உயிரோடு இருக்கிறோமா’ என்று கேட்கிறாயே! உயிரோடு இல்லாவிட்டால் இப்படி நீ என்னிடம் கேட்க முடியுமா?’’ என்று கூறி மேலும் சிரித்தான்.

மெல்லத் தன் தங்கையை அழைத்துக்கொண்டு போய் ஒரு கடையில் தெரிந்த பெரிய கண்ணாடியில் அவள் உருவத்தையும் தன் உருவத்தையும் காண்பித்தான். அப்போதுதான் அவளுடைய சந்தேகம் தீர்ந்தது.

ஆனாலும் கண்ணாடியில் தெரிந்த தங்களுடைய உருவங்களைக் கண்டவுடன் அவர்களுக்கே திகைப்பு ஏற்பட்டது.

‘அடடா! ஒரு நாளைக்குள் இவ்வளவு கோரமாக மாறிவிட்டோமே! அரண்மனைக் குழந்தைகள் என்று சொன்னால் இனி யார்தான் நம்புவார்கள்? எங்களைத் திருடன் கொலை செய்துவிட்டதாகப் பத்திரிகைகளில் வேறு செய்தி வந்துவிட்டது!’

சந்திரனுக்கே நம்பிக்கை தளர்ந்துகொண்டு வந்தது.

"வா மல்லிகா! கடைசி கடைசியாக இன்னொரு முறை முயற்சி செய்வோம். முடிந்தால் அரண்மனைக்குள் நுழையப் பார்ப்போம். முடியாவிட்டால் வேறு எங்கேயாவது போவோம்" என்றான் சந்திரன்.

பழையபடி இருவரும் அரண்மனை வாசலுக்கே போனார்கள். அந்தப் பாஷை புரியாத சிப்பாய்தான் இப்போதும் அங்கே நின்றான். ஆகையால் அவர்கள் உள்ளே போகவில்லை. மறைவான ஓர் இடத்தில் நின்றுகொண்டிருந்தார்கள்.

ஒருமணி நேரத்துக்கு மேல் கால் கடுக்க நின்றார்கள். "உள்ளேயிருந்து கார் வந்தால் நீ சொல்லு; நான் வெளியே இருந்து உள்ளே நுழைகிறதா என்பதைப் பார்த்துக்கொள்கிறேன்" என்றான் சந்திரன்.

கார் வரும் சத்தம் கேட்டது. வெளியே இருந்து தான் வந்தது.

கார் அரண்மனை வாசலுக்கு வெகுசமீபமாக வந்து விட்டது.

சந்திரன் குடுகுடுவென்று மல்லிகாவை இழுத்துக் கொண்டு வந்து காருக்கு நேர் குறுக்கே நிறுத்தினான். தானும் காரில் அடிபடப் போகிறவன்போல் முன்னால் ஓடி நின்றான்.

காரும் வந்து அவர்கள்மேல் மோதியது. அவர்களைக் கீழே தள்ளியும் விட்டது. ஆனால் அவர்கள் மேல் ஏறவில்லை; அவர்களைப் பலமாகக் காயப்படுத்திக் கொண்டு உள்ளே போகவில்லை.



காரிலிருந்து ராஜாவே பதறிக்கொண்டு இறங்கி வந்தார். அவருடன் பட்டத்து ராணியும் வந்தாள். கீழே கிடந்த குழந்தைகளை ஆளுக்கொருவராய்த் தூக்கிப் பார்த்தார்கள். சந்திரனும் மல்லிகாவும்!

"நாங்கள் சாகவில்லை அப்பா. எங்களை ஒருவனும் கொல்லவில்லை! எங்கள் உடுப்பைத்தான் ஒருவன் திருடிக்கொண்டான். அவனைவிட்டு விடுங்கள்" என்றான் சந்திரன்.

இருவருக்கும் இலேசான காயம்; இருவரும் அப்படியே பெற்றோர்களைக் கட்டிக் கொண்டார்கள். ராஜாவும் ராணியும் கண்களில் கண்ணீருடன் குழந்தைகளை உச்சி முகர்ந்தார்கள்.

"இனிமேல் உங்களிடம் சொல்லிக்கொள்ளாமல் நாங்கள் எங்கும் போகமாட்டோம் அப்பா!" என்று கதறினான் சந்திரன். மல்லிகாவும் தாங்கள் செய்த தவறுக்காக அழுதாள்.

ஆனால் ஏழைகளின் துன்பத்தை ஒருநாள் அனுபவித்த சந்திரன் அதை மறக்கவே இல்லை. அவன் தங்கை மல்லிகாவும் அப்படியே அதை மனத்திற்குள் வைத்திருந்தாள். ஏழைகள் உலகம் எவ்வளவு பயங்கரமானது! எத்தனையோ துயரங்கள் அவர்களைப் பாடாய்ப் படுத்திக் கொண்டிருப்பதை அவர்கள் கண்ணால் கண்டார்கள். அவர்களே அத்துன்பங்களில் சிலவற்றை அனுபவித்தும் விட்டார்கள்.

* * * *

மத்தியில் இருபது வருடங்கள் ஆகிவிட்டன. அண்ணனும் தங்கையும் மேல்நாடுகளுக்குப் படிக்கப் புறப்பட்டார்கள்.

அவர்கள் அங்கே என்ன படித்தார்கள் தெரியுமா? ஏழைகளுக்கு எப்படி உதவி செய்வது என்பதைப் படித்தார்கள். கைகால் இல்லாதவர்களுக்கும், குருடர் களுக்கும், நோயாளிகளுக்கும் எப்படி வாழ்வு அளிப்பது என்பதைக் கற்ருர்கள். எல்லோருக்கும் எப்படி வேலையும் கூலியும் கொடுப்பது என்பதைக் கண்டார்கள்.

அமெரிக்காவில் குருடர்கள் வேலை செய்தார்கள். பழம் எண்ணிப் போடும் வேலை, அச்சுக் காகிதத்தை மடக்கும் வேலை; புத்தகங்கள் அடுக்கும் வேலை, டைப் அடிக்கும் வேலை—இதைப் போன்ற பல வேலைகள். அதன் மூலம் வந்த பணத்தால் அவர்கள் சந்தோஷ மாக வாழ்ந்தார்கள். குருட்டுப் பாடகர்கள், வாத்தியம் வாசிப்பவர்கள் எல்லாம் அங்கே மகிழ்ச்சியுடன் இருந் தார்கள்.

காலில்லாத நொண்டிகள் அங்கே உட்கார்ந்து கொண்டு செய்யும் பல வேலைகளைச் செய்தார்கள். குமாஸ்தா வேலை, வியாபாரம், கணக்கு இன்னும் பற் பல வேலைகள்.

கையில்லாத முடவர்கள் காலால் செய்யக்கூடிய வேலைகளைச் செய்தார்கள். ஊமையர்களுக்கும், செவி டர்களுக்கும் அங்கே அவரவர்களுக்குத் தகுந்த வேலைகள் இருந்தன. அவற்றையெல்லாம் கவனித்து வந்தான் சந்திரன்.

சந்திரனுக்கும் மல்லிகாவுக்கும் படிப்பு முடிந்த பிறகு தங்க நகரமே ஒரு புதிய இன்ப நகரமாக மாறியது. அந்த நகரத்திலும், அதைச் சுற்றிப் பல நூறு மைல்களுக்கும் ஒரு பிச்சைக்காரன்கூடக் கிடையாது. பசியினுல் வாடக்கூடியவர்கள் யாருமில்லை. எல்லோரும் வேலை பார்த்தார்கள்; கூலி பெற்ருர்கள் மிகவும் சந்தோஷமாக வாழ்ந்தார்கள்.

முடவனுக்கு வேலை,

குருடனுக்கு வேலை,

ஊமையனுக்கு வேலை,

நொண்டிக்கு வேலை,

எல்லோருக்குமே வேலை!

வேலை செய்ய முடியாத நிலையில் உள்ள நோயாளிகளுக்கு ஆஸ்பத்திரியில் வைத்திய உதவி இலவசமாக கிடைத்தது. அத்துடன் வயிறு நிறைய உணவும் அவர்களுக்குக் கிடைத்தது. இவ்வளவுக்கும் பணம் வேண்டாமா? அரண்மனைப் பணம் முழுவதையும் இதற்கே செலவிட்டான் சந்திரன். அதைத் தவிர தன் ராஜ்யத்திலிருந்த எல்லாப் பணக்காரர்களிடமும் சொல்லிப் பணத்தைக் கொண்டு பல தொழில்கள் ஆரம்பிக்கச் செய்தான். வரும் லாபத்தில் ஒரு பகுதியை மக்கள் நல நிதிக்காக வரியாக வசூல் செய்தான்.

ஒரு புதிய, மகிழ்ச்சி பொங்கும் ராஜ்யத்தையே சந்திரன் ஏற்படுத்தி விட்டான். அவனுக்கு உதவியாக இருந்தாள் அவன் தங்கை மல்லிகா.

பிச்சைக்காரர்கள் தங்க நகரத்தில் கிடையாது. அதேபோல் உழைக்காமல் ஏழைகளை ஏமாற்றி உறிஞ்சும் அட்டைகளான கோடீசுவரர்களும் அங்கு கிடையாது. வேலையில்லாமல் சோம்பித் திரியும் கூட்டமும் இல்லை. அந்த ஊரில் எப்போதும் மகிழ்ச்சிதான்; சிரிப்புத்தான். உழைப்பும் ஓய்வுந்தான். எங்கே நீங்களும் சிரியுங்கள்!

சிரித்துவிட்டுச் சிந்தித்துப் பாருங்கள்; சந்திரனும் மல்லிகாவும் அப்படி தங்கள் நாட்டை உயர்த்த முடியுமானல் நாமும் ஏன் நம் நாட்டை உயர்த்த முடியாது?



# வீரச் சிறுவன்

பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இரண்டாவது உலகப்போர் நடந்துகொண்டிருந்தது. அப்போது நம்நாடு விடுதலை அடையவில்லை. அந்த விடுதலைக்காகப் பர்மாவிலும், மலேயாவிலும் இருந்த சுதந்தர இந்தியச் சேனை வெள்ளைக்காரர்களுக்கு எதிராகப் போரிட்டுக்கொண்டிருந்தது. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அதற்குத் தலைமைதாங்கி நடத்திக் கொண்டிருந்தார். இந்தியா அச்சமயம் அடிமையாக இருந்ததால், விடுதலைக்காக நமது வீரர்கள் போராடினார்கள். பர்மாவின் அடர்ந்த காடுகளில் நமது சுதந்தர வீரர்களுக்கும், வெள்ளைக்காரர்களுக்கும் கடுமையான சண்டை நடந்தது.

1945-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஒருநாள்......

பர்மாவின் காட்டுக்குள்ளிருந்த சிறு கிராமத்திற்கு அடுத்தாற்போல் ஒரு குன்று இருந்தது.

அந்தக் குன்றுக்கு அருகில் நாலைந்து தமிழ்ச் சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லாருமே பர்மாவில் வசித்து வந்த தமிழ்க் குடும்பத்துக் குழந்தைகள்தாம்.

அந்தப் பக்கமாக பத்துப் பதினைந்து சுதந்தர இந்திய வீரர்கள் அணிவகுத்துச் சென்றார்கள். அவர்களைக் கண்டவுடன் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களுக்கு மகிழ்ச்சி பிறந்துவிட்டது.

விளையாட்டை மறந்து வரிசையாக நின்றுகொண்டு "ஜேஹிந்த்!" என்று கூறி மரியாதை செய்தனர்.

போர் வீரர்களும் சிரித்துக்கொண்டு பதிலுக்கு மரியாதை செய்தார்கள். அவர்களுடைய தலைவன் திடீரென்று நின்றான். மற்ற வீரர்களும் நின்றார்கள்.

"உங்களில் யாராவது எங்களுக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?" என்று கேட்டான் தலைவன்.

"ஓ, செய்கிறேன்!" என்று முன்னால் வந்தான் அந்தச் சிறுவர்களில் ஒருவன்.

"உன் பெயரென்ன?"

"பாலு"

பாலுவின் முதுகில் தலைவன் தட்டிக்கொடுத்தான்.

"மிகவும் சிரமமான உதவி பாலு! பயப்படாமல் செய்வாயா? திறமையோடு செய்யவேண்டும். முடியாவிட்டால் வேண்டாம்" என்றான்.

"நிச்சயம் செய்கிறேன் ஐயா. எனக்குப் பயமே கிடையாது" என்றான் பாலு.

"அப்படியானால் இங்கு வா" என்றழைத்து "நீ மட்டிலும் இந்தச் செடிப் புதர்களுக்கு மத்தியில் மறைந்து முன்னால் வேகமாகப் போகவேண்டும். சிறிது தூரத்தில் எதிரிகள் சிலபேர் இருப்பதாகத் தெரிகிறது. இருக்கிறார்களா என்று பார்த்து வந்து சொல்ல வேண்டியது. நாங்கள் இங்கேயே இருக்கிறோம்" என்றான் தலைவன்.

"சரி" என்றான் சந்தோஷத்தோடு பாலு.

"நீ சிறுபிள்ளை ஒளிந்துகொண்டே ஓடி வந்து விடு. அதனால்தான் உன்னை அனுப்புகிறோம். பெரியவர்கள் போனால் கண்டுபிடித்து விடுவார்கள் என்றான் தலைவன்.

அத்துடன் பாலு புறப்படுகையில் வீரர் தலைவன் அவனுக்கு ஒரு பரிசும் கொடுத்தான். பரிசு ஒரு விளையாட்டுத் துப்பாக்கி. அதனால் சுட்டால் சப்தம் மட்டும் பலமாகக் கேட்கும். வேறு ஒன்றும் நடக்காது. அதை வாங்கிச் சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டு, பாலு செடிகளுக்குள் மறைந்தான். ஒளிந்து ஒளிந்து சந்தடியில்லாமல் முன்னேறினான்.

புதர்கள் அசையாதபடி, புதர்களுக்கு மேல்அவன் தலை தெரியாதபடி, மண்டியிட்டுச் சென்றான். சில இடங்களில் தரையில் உருண்டுகொண்டே போனான்.



தாய்நாட்டு விடுதலைப் போரில் தானும் ஒருவீரன் என்ற எண்ணம் அவனுக்கு அதிக மகிழ்ச்சியைக் கொடுத்தது.

பையில் இருந்த துப்பாக்கியைத் தொட்டுத் தொட்டுப் பார்த்துக்கொண்டான். அது ஒரு உண்மைத் துப்பாக்கியாக இருந்தால், அதனுல் ஒரு எதிரியைச் சுடலாமே என்று எண்ணினுன். ஒளிந்துகொண்டே படீரென்று எதிரியின்மேல் சுட்டால் எப்படியிருக்கும்!

அப்படி அவன் போகும்போது, அவன்மேல் முள் குத்தியது. கல்லும், மண்ணும் அவனுக்குக் கஷ்டம் கொடுத்தன.

புதர்களுக்குள் ஓநாய்கள் ஒளிந்துகொண்டு, அவனை உற்றுப் பார்ப்பதாக அவனுக்குத் தோன்றியது. ஆனுல் அவன் பயப்படவில்லை. முன்னேறினுன், மெதுவாக.

கடைசியாக அவன் எதிரிகளைப் பார்த்துவிட்டான். நாலைந்து பேர்கள் சிறு பொட்டலில் உட்கார்ந்து கொண்டு, நாலாபக்கமும் கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களிடம் துப்பாக்கிகளும், துப்பாக்கி முனையில் கத்திகளும் தயாராக இருந்தன.

அவர்களைப் பார்த்தவுடன் பாலுவுக்கு ஒரு தரம் தூக்கிவாரிப் போட்டது. உடம்பெல்லாம் நடுங்கியது. ஆனாலும், அவன் நிதானமாகத் திரும்பினான்.

திரும்பும்போது, அவனுடைய சட்டை ஒரு முள் புதரில் மாட்டிக்கொண்டது. மெதுவாக எடுத்துப் பார்த்தான். முடியவில்லை. அவசரப்பட்டு அதை இழுத்துவிட்டான்.

உடனே முள் புதர் பலமாகக் குலுங்கத் தொடங்கியது. அவ்வளவுதான்! எதிரிகளில் ஒருவன் அசைந்த செடியைப் பார்த்துவிட்டான். பாலு இருந்த இடத்துக்குப் ஓடோடியும் வந்தான்.

பாலு தப்பித்துக்கொண்டு ஓடப் பார்த்தான். ஆனால், முடியவில்லை. அவனைச் சுற்றி அத்தனை பேரும் வளைத்துக்கொண்டார்கள்.

“நீ யார்?” என்று அதட்டினார்கள்.

பாலு பயப்படவில்லை; பதில் பேசவுமில்லை.

“பதில் சொல்லுகிறாயா? இல்லை, உன்னைக் கொன்று போடட்டுமா?” என்று ஒருவன் உறுமினான். துப்பாக்கியை எடுத்து, பாலுவின் நெஞ்சுக்கு நேரே பிடித்தான்.

பாலு ஒரு கணம் யோசனை செய்தான். இனித் தன்னால் தப்பமுடியாது என்பதையும் தெரிந்துகொண்டான்.

ஆனால் தாய்நாட்டின் சுதந்திர வீரர்களுக்கு உதவியும் செய்தாக வேண்டும். இதற்கு என்ன செய்வது? அவர்கள் தேடிவந்த எதிரிகள் இங்கே இருக்கிறார்கள் என்பதை அவர்களிடம் எவ்விதம் தெரியப்படுத்துவது?

சட்டைப் பைக்குள் கையைவிட்டான். பொம்மை துப்பாக்கியை எடுத்து விசையை அழுத்தினான்.

'டுமீல்! டுமீல்!' என்று பொய் வேட்டுக்கள் கிளம்பின. பத்துப் பன்னிரண்டு வேட்டுக்கள்! அதன் சத்தம் கேட்டு விடுதலை வீரர் ள் ஓடோடியும் வந்தார்கள்.

ஆனால் அதுவரை வீரச்சிறுவன் பாலுவை எதிரிகள் சும்மாவிட்டு வைப்பார்களா? ஒரு குண்டின் மூலம் துப்பாக்கியால் அவன் நெஞ்சைத் துளைத்தார்கள். பாலு புன்முறுவலோடு கீழே விழுந்தான்.

தாய்நாட்டிற்காக மார்பில் குண்டை ஏற்றுக்கொண்டு வீரனாக மண்ணில் சாய்ந்தான். அஞ்சாத நெஞ்சனாக அவன் கண்களை மூடினான்.

அதற்குள் சுதந்தர வீரர்கள் வந்து, அங்கிருந்த எதிரிகள் அனைவரையும் சூழ்ந்துகொண்டு கொன்று குவித்தார்கள்.


பாலுவின் உடலைப் பர்மாவின் அடர்ந்த காட்டில் ஒரு சிறு குழி தோண்டிப் புதைத்தார்கள். காட்டுப் பூக்களால் மாலைகட்டி அவனுக்குப் போட்டார்கள்.

அவனுடைய புதைகுழியின் மேல் சுதந்தரக் கொடி ஒன்றைப் பறக்கவிட்டு அவனுக்கு ராணுவ மரியாதை செலுத்தினர்கள்.

இன்னும், பாலு அங்கே வீரனுக உறங்குகிருன். இந்தியத் தாய் பெற்றெடுத்த சுதந்தரத் தமிழ்மகன் அங்கே புன்சிரிப்போடு தூங்குகிருன். சுதந்தரம் பெற்ற நாம், அவனுக்கு நம்முடைய அன்பு வணக்கத்தைச் செலுத்துவோம். அவனைப்போல வீரர்களாக வாழ்ந்து நாட்டைக் காப்பாற்றுவோம்.

நாம் வீரமில்லாத கோழைகளாக வாழ்ந்தால் நமக்குக் கிடைத்திருக்கும் சுதந்தரத்தை மறுபடியும் வெளிநாட்டார்கள் பறித்துக்கொள்ள முயல்வார்கள்.

வீர வாழ்வுதான் உயர்ந்த வாழ்வு.







வெள்ளைக் காகத்தைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஆம், கேள்விப் பட்டிருப்பீர்கள். ஆனால், ஒருவர்கூடப் பார்த் திருக்க மாட்டீர்கள். ஏனென்றால், அது இப் போது கிடையாது.

முன்னொரு காலத்தில் உலகத்தில் வெள்ளைக் காக்கை இருந்தது. அப்படி யானால் அது ஏன் இப்போது இல்லை என்று கேட்கிறீர்களா? அதற்குப் பதில்தான் இந்தக் கதை.

வெள்ளைக் காகம் பார்ப்பதற்கு அழகாயிருக்கும்; தும்பைப் பூ போன்ற தூயநிறம்; பளிங்குக் கண்கள்; பவளச் சிவப்பான கால்கள்; அதே நிறத்தில் அலகுகள்.

இவை கூட்டங் கூட்டமாய் உலகத்தின் வடக்கே பனிப் பிரதேசத்தில் வாழ்ந்தன. இவைகளுக்கு உணவு அங்கே இருக்கும் சிறு பூச்சிகள், புழுக்கள் முதலியன.

வருஷத்தில் பல மாதங்கள் இவை உறை பனிப் பொந்துகளுக்குள் உறங்கும்; பனி உருகிச் சூரியன் வரும் சமயங்களில் வெளியே இரைதேடப் புறப்படும். இப்படியே வெகுகாலம் இவை அங்கு வாழ்ந்து வந்தன.



ஒரு சமயம் இரு காகங்கள் மட்டும் அங்கிருந்து தெற்கு நோக்கிப் பறந்துவந்தன. ஒருநாள், இரண்டு நாள், இப்படிப் பல நாட்கள் பறந்துகொண்டே வந்தன.

வழியில் கிடைக்கும் ஆகாரத்தைச் சாப்பிட்டு, சிறகு வலித்த போதெல்லாம் ஓய்வெடுத்துக்கொண்டு பறந்து வந்தன. இப்படி ஒரு மாதம் பறந்த பிறகு உல கத்தின் மத்திய பாகத்தை அவை சேர்ந்துவிட்டன.

அங்கே அவைகள் கண்ட காட்சி அவைகளைப் பிரமிக்க வைத்தது. எங்கே பார்த்தாலும் மரம், செடி, கொடிகள் நிறைந்திருந்தன. அவைகளில் விதவித மான பழங்கள் கொத்துக் கொத்தாய், குலைகுலையாய்த் தொங்கின.

ஆலமரத்தின் இரத்தச் சிவப்பான உருண்டைச் சிறு கனிகளையே ஒருநாள் முழுவதும் சாப்பிட்டுக் கொண்டிருக்கலாம் போலிருந்தது.

இவை மட்டுமா? ஆறுகள், குளங்கள், சுனைகள், கரையான் புற்றுக்கள், மண் புழுக்கள்—இவையும் அவைகளுக்கு உணவாக எங்கும் இருந்தன.

ஆனால், அங்கே இவைகளைப் புசித்துக்கொண்டும் பாடிக்கொண்டும், பறந்துகொண்டும் மற்றொரு காக்கை கூட்டம் ஏற்கெனவே இருந்தது.

இவைகள் கறுப்புக் காக்கைகள். இப்போது இருக் கின்றனவே, இவைபோன்ற காக்கைகள். காலையில் எழுந்து கூட்டங் கூட்டமாய் ஆகாயத்தில் பறப்பதும், மத்தியானம் இரை தேடுவதும், மாலையில் ஆற்றில் குளித்துவிட்டுப் பாடுவதும், இரவில் குஞ்சுகளுடன் குலாவிவிட்டுக் கூடுகளில் உறங்குவதுமாக இருந்தன.

புதிய இரு வெள்ளைக் காகங்களைப் பார்த்தவுடன் கறுப்புக் காகங்களுக்கு அதிக மகிழ்ச்சி ஏற்பட்டது.

அவை வெள்ளைக் காகங்களை மரியாதையோடு வரவேற்றன; நன்றாக உபசரித்தன. பனிப்பிர தேசத்தின் குளிரையும், கஷ்டத்தையும் கேட்டுவிட்டு

அவைகள் திரும்பும்போது, சுமக்குமட்டும் அவைகளுக்குப் பழங்களையும், புழுக்களையும் கொடுத்து அனுப்பின.

இரு வெள்ளைக் காகங்களும் தங்களது சொந்த இடத்தை அடைந்தபோது, எல்லாக் காகங்களும் இவற்றைச் சூழ்ந்துகொண்டன; மத்திய உலகத்தின் செய்திகளை அக்கரையோடு கேட்டன. அங்கே உள்ள பழங்களையும், புழுக்களையும் கேள்விப்பட்டபோது எல்லாக் காகங்களின் வாய்களிலும் நீர் ஊறியது.

'அப்படியுமா ஒரு பிரதேசம் இருக்கிறது! இத்தனையும் அங்கே இருக்கும்போது நாம் ஏன் இங்குப் பனியில் சாகவேண்டும்? போதிய ஆகாரம் கிடைக்காமல் திண்டாடவேண்டும்?' என்று வெள்ளைக் காகங்கள் எண்ணின.

கடைசியாக எல்லா வெள்ளைக் காகங்களும் தீர்மானம் செய்து, அவற்றிலிருந்து ஒரு பெரிய கூட்டத்தை மத்திய உலகத்திற்கு அனுப்பி வைத்தன.

ஏற்கனவே அங்கிருந்த கறுப்புக் காக்கைகள் அந்த வெள்ளைக் காக்கைகளின் வரவால் மகிழ்ச்சியே அடைந்தன.

''நம்மிடம்தான் எல்லாப் பொருளும் ஏராளமாயிருக்கின்றனவே! அவைகளும் வந்து நம்முடன் வாழட்டுமே!'' என அவைகளுக்கு எல்லாச் சௌகரியங்களும் செய்துகொடுத்தன.

வெள்ளைக் காகங்கள் ஆரம்பத்தில் சில நாள் கறுப்புக் காகங்களுடன் கூடியே வாழ்ந்தன. ஆனால்,

நாளடைவில் அவைகளுக்கு இவற்றின்மேல் வெறுப்பு ஏற்பட ஆரம்பித்தது.

'நாம் எவ்வளவுவெள்ளையாய், அழகாய் இருக்கிறோம்! அந்த நாமும் அடுப்புக்கரிப் பிராணிகளும் ஒன்றாய் வாழ வேண்டுமாம். எத்தனை நாள் இப்படி இருப்பது! அழகே கொஞ்சம்கூட அவைகளுக்கு இல்லையே! நம் முடைய வேலைக்காரர்களாக இருக்க வேண்டிய அவை களுடன் நாம் இத்தனை காலமாய்ச் சேர்ந்து வாழ்ந் தோமே!' என்று தங்களுக்குள் குறைபட்டுக் கொண்டன.

தங்கள் குறையை நிவர்த்தி செய்துகொள்வதற் காகவும், தாங்கள் கருப்புக் காக்கைகளுக்கு எஜமானர் களாவதற்கும் அவைகள் தந்திரம் செய்தன.

உடனே வெள்ளைக் காக்கைகள், கறுப்புக் காகங் களுக்குள் சண்டையைக் கிளப்பிவிட்டன. பிளவை ஏற்படுத்தின. அவைகளின் ஒற்றுமையைக் குலைத்தன.

வெள்ளைக் காகங்கள் அண்டங்காக்கைகளிடம் போய், "நீங்கள் மிக்க கறுப்பாய் அழகாக இருக் கிறீர்கள். இது தெரியாமல் சாதாரண காக்கைகள் உங்களை அடுப்புக்கரி என்று கேலி செய்கின்றன. நீங்கள் சும்மா இருக்கலாமா?" என்றன.

பிறகு சாதாரணக் காக்கைகளிடம் போய், "நீங் களும் அந்த அண்டங் காக்கைகளும் ஒன்றாய் இருக்

DR T. P. M. LIBR

கிறீர்களே! உங்கள் அழகென்ன! கவர்ச்சியென்ன! உங்கள் கழுத்திலே உள்ள சாம்பல் பட்டை அவைகளுக்குண்டா? நீங்கள் அந்தச் சனியன்களைத் தள்ளி வையுங்கள்'' என்று போதித்தன.

இதனால் அண்டங் காக்கைகளுக்கும், சாதாரண கறுப்புக் காக்கைகளுக்கும் ஒரு பெரும் போர் மூண்டது.

கடைசியில் இருபுறமும் அநேக கறுப்புக்காகங்கள் மடிந்தன. இதைக் கண்ட வெள்ளைக் காகங்கள் உள்ளுக்குள் ஆனந்தப்பட்டுக்கொண்டு ''உங்களுக்குள் ஒற்றுமையாய் வாழத் தெரியவில்லை. சண்டை போட்டுக் கொள்கிறீர்கள். வெள்ளைக் காகங்களாகிய நாங்கள் உங்களுக்கு எஜமானர்களாயிருந்து உங்களைப் பாதுகாக்கிறோம்'' என்றன.

தந்திரம் தெரியாத மூடக் காகங்களும் இதற்கு ஒத்துக்கொண்டன. ஆனால் எஜமானப் பதவி என்று கிடைத்துவிட்டால் யாரும் சும்மா இருக்கமுடியுமா?

வெள்ளைக் காகங்களுக்கு ஒரே கர்வம்; தங்கள் மனம் போனபடியெல்லாம் இவைகளை ஆட்டி வைத்தன; படாதபாடெல்லாம் படுத்தின; உணவைக் குறைத்தன. கடுந்தண்டனைகள் விதித்தன.

எத்தனை காலந்தான் இந்த அதிகாரம் செல்லும்? பல ஆண்டுகள் கறுப்புக் காகங்கள் அவைகளிடம் கஷ்டப்பட்ட பிறகு நல்ல புத்தி வந்தது.

'நமக்குள் சண்டை போட்டல்லவோ வெள்ளை காகங்களுக்கு அடிமையானோம். நம்மை வெள்ளைக் காக்கைகள் ஏமாற்ற விட்டுவிட்டோமே! இனி அப்படி இருக்கக்கூடாது' என்று கறுப்புக் காகங்கள் தீர் மானித்தன. அண்டங் காக்கைகளும் சாதாரண காக்கைகளும் விரோதத்தைவிட்டு ஒன்று சேர்ந்தன.

பிறகு அவ்விரு சார்புக் காக்கைகளும் ஒற்றுமை யாய் வெள்ளைக் காகங்களிடம் சென்று, "இனி எங் களுக்கு உங்கள் உதவி தேவை இல்லை. எங்களுக்குள் சமாதானமாக வாழ்கிறோம். எஜமானப் பதவியிலிருந்து இறங்கி விடுங்கள். எங்களோடு சமமாய் வாழ்வதானால் நீங்கள் இங்கிருக்கலாம். இல்லாவிட்டால் உங்கள் பிர தேசத்திற்கு மூட்டை கட்டலாம்" என்றன.

கறுப்புக் காக்கைகள் ஒற்றுமையோடு ஒன்று சேர்ந்து சொல்லும் போது வெள்ளைக் காக்கைகளால் என்ன சொல்ல முடியும்? ஆனால் சிலநாள் அதிகார எண்ணம் போகவில்லை.

"நாங்கள் உங்களோடு சமமாய் வாழமுடியாது. எஜமானர்களாயில்லாவிட்டால் எங்கள் இடம் போகி றோம்" என்று வெள்ளைக் காக்கைகள் கூட்டமாய் வடக்கு நோக்கிப் பறந்தன.


கறுப்புக் காகங்களும் அவைகளிடம் வெறுப்புக் கொள்ளாமல் வழியனுப்பி வைத்தன.

அதன் பிறகுதான் கறுப்புக் காக்கைகள் ஒற்றுமை யின் உண்மையைக் கண்டுகொண்டன. அதனால்

தான் இன்றுகூட எல்லாக் காகங்களும் உணவைப் பகிர்ந்து சாப்பிடுகின்றன. ஒரு காகம் இறந்தால் எல்லாக் காகங்களும் அழுகின்றன. எந்தச் சமயமும் கூட்டங் கூட்டமாய் வாழ்கின்றன.

அவைகள் இப்போது பாடும் பாடல் உங்களுக்குத் தெரியுமா? இதோ கீழே இருக்கிறது :

வெள்ளை நிறத்தொரு காக்கை—அதை
வேண்டி விருந்துண்ணச் செய்தோம்
கொள்ளை கொலை செயப் பார்த்தது—ஆனல்
கூட்டமாய்ச் சேர்ந்தே பின் போனது.



# சிவப்பு விளக்கு

பாலையா அண்ணன்; பசுபதி தம்பி; தம்பிக்குத் தெரியாமல் அண்ணன் புறப்பட்டான். நடுஇரவில் வீட்டைவிட்டுக் கிளம்பினான். தம்பி தூங்குகிறான் என்று அவன் நினைத்தான்.

ஆனால் தம்பி பசுபதி தூங்குகிறானா? இல்லை! அண்ணனுக்குத் தெரியாமல் தம்பியும் அவன் பின்னால் புறப்பட்டான்.

இருளிலே அண்ணன் முன்னால் நடந்தான். இருளில் ஒருவனுடைய நிழல் கண்ணுக்குத் தெரியாதல்லவா?

அந்தக் கண்ணுக்குத் தெரியாத நிழலைப் போலவே, தம்பி பசுபதி, பாலையாவைப் பின் தொடர்ந்தான்.

இவர்கள் இருவரும் நள்ளிரவில் வீட்டைவிட்டுப் போய்விட்டார்கள். தாயாருக்கு இதெல்லாம் தெரியாது. அவள் நன்ருகத் தூங்கிக்கொண்டிருந்தாள்.

பாலையாவுக்கு இருபது வயதுக்கு மேல் இருக்கும். சிறிது படித்துவிட்டு, ஒரு வேலையுமில்லாமல் சுற்றிக் கொண்டிருந்தான். அவனுடைய நடவடிக்கைகளே ஒருவிதமாக இருந்தன.

சில மாதங்களாக அடிக்கடி சிலபேர் அவன் வீட்டுக்கு வந்தார்கள். இரகசியமாக 'கசமுச''கசமுச' என்று பேசிக்கொண்டார்கள். இதையெல்லாம் சந்தேகத்தோடு கவனித்தான் பசுபதி.

பசுபதி பத்தாவது படித்துக்கொண்டிருந்தான். சுறுசுறுப்பானவன். எல்லோரிமுடம் பிரியமாக நடந்து கொள்வான். தாயாருக்கு அவன்மேல் உயிர். தகப்பஞர் இறந்துவிட்டார்.

பாலையாவின் நண்பர்களைப் பார்க்க பசுபதிக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் எல்லோரும் வீட்டுக்கு வந்தால், பசுபதியை சந்தேகத்தோடு பார்ப்பார்கள்.

எப்போதும், அவர்கள் திருட்டு விழி விழிப்ப தாகவே பசுபதிக்குத் தோன்றியது. தன்னுடைய அண்ணன் அவர்களோடு சேர்ந்து கெட்டுப்போகிருன் என்று நினைத்தான்.

ஆகையினுல்தான், அன்று இரவு பாலையா புறப் பட்ட பிறகு, அவனுக்குத் தெரியாமல் தம்பியும் பின் தொடர்ந்தான்.

அமாவாசை இருட்டு. கன்னங்கரேலென்று எங்கே பார்த்தாலும் இருட்டு ஒட்டிக்கொண்டிருந்தது. அந்த இருட்டில் கையிலே ஒரு ‘பாட்டரி’ விளக்குடன் பாலையா நடந்தான். பசுபதி கையிலும் ஒரு பாட்டரி விளக்கு இருந்தது. ஆனால், அவன் அதை ஏற்ற வில்லை. திருடன்போல் சத்தம் செய்யாமல் தன்னுடைய அண்ணன் பின்னால் நடந்தான்.

வழியில் ஒரு செடிப்புதர் தெரிந்தது. திடீரென்று அதற்குள் போய் மறைந்தான் பாலையா.

“வா பாலையா, எல்லாம் முடிந்துவிட்டது. இனி நடக்க வேண்டியதற்காகக் காத்திருக்கிறோம்” என்று ஒரு குரல் கூறுவதைக் கேட்டான் பசுபதி.

அந்தக் குரலைத் தொடர்ந்து பல குரல்கள் பாலையாவை வரவேற்றன.

“நேரம் ஆகிவிட்டது. அரைமணி நேரம்கூட இன்னும் இல்லை” என்றது மற்றொரு குரல்.

எல்லாம் பசுபதிக்குப் பழக்கப்பட்ட குரல்கள்! அவன் அண்ணனைத் தேடிவரும் நண்பர்கள் தாம் அவர்கள்.

பசுபதி சற்று மறைவாக இருந்து உற்றுக் கேட்டான். அவர்கள் பேசிக்கொண்டதை கேட்டபொழுது குடல் நடுங்கியது. மிகவும் பயங்கரமான செய்திகளை அந்தப் பயங்கரமான இருட்டில் அவர்கள் பேசிக் கொண்டார்கள்.

பிசாசுகளைப் பசுபதி பார்த்ததில்லை. ஒருவேளை பிசாசுகளும் இப்படித்தான் பேசிக்கொள்ளுமோ என்று பசுபதிக்குத் தோன்றியது.

'ஐயோ! என்ன மாதிரிக் கொலைகாரர்கள் இவர்கள்! எத்தனை உயிர்களுக்கு உலைவைக்கப் பார்த்து விட்டார்கள்' என்று நினைத்தான் பசுபதி.

சத்தம் செய்யாமல் பசுபதி படுவேகமாய் அந்த இடத்தை விட்டு நழுவினான். 'பாட்டரி' விளக்கைப் போடாமலே நேராக நடந்தான். விளக்கு வெளிச்சம் தெரிந்தால் அவர்கள் கண்டுபிடித்து விடுவார்களல்லவா?

எங்கே அப்படிப் பசுபதி ஓடுகிறான்? கல்லையும் முள்ளையும் கவனிக்காமல் ஓடுகிறானே! பாம்பு, பூச்சி முதலியவற்றைப் பொருட்படுத்தாமல் ஓடுகிறானே!

ரயில்வே பாதை வந்தது. ஒரு மேட்டின்மேல் தண்டவாளங்கள் ஓடின. மறைந்து மறைந்து அந்த மேட்டில் ஏறினான்.

உண்மைதான்! அந்தப் பாதகர்கள் பேசியது உண்மைதான். அங்கே ஓரிடத்தில் தண்டவாளங்கள் பெயர்க்கப்பட்டிருந்தன!

வருகிற ரயிலைக் கவிழ்ப்பதற்காகவே அவர்கள் இந்தச் சூழ்ச்சி செய்திருக்கிறார்கள்!

அது மாத்திரமல்ல; அந்தச் சமயம் திடீரென்று ஓடிவந்து கொள்ளையடிப்பதற்கும் தயாராக ஒளிந்திருக்கிறார்கள்! இவர்கள் யார்? பசுபதியினுடைய அண்ணு பாலையா யார்?

இவர்களெல்லாம் வெறிபிடித்த புரட்சிக்காரர்களா? அல்லது கொள்ளைக்காரர்களா?

இந்தக் காலத்தில் இருவருக்குமே வேற்றுமை தெரிவதில்லையே! யாராயிருந்தால் என்ன? மனிதப் பேய்கள், இவர்கள்! —ஆயிரம் உயிர்களைக் கொலை செய்ய வழி செய்து விட்டார்கள்! நம்முடைய நாட்டுக்கும் பொருளுக்கும் எமனாய் முளைத்துவிட்டார்கள்!

பசுபதி தனியாக அங்கேயிருந்து என்ன செய்வான். அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை.

சீக்கிரம் ரயில் வந்துவிடும். அதை நிறுத்தியாக வேண்டும். எப்படி நிறுத்துவது? கையைக் காட்டினால் நிறுத்தமாட்டார்களே, ரயிலை!

பகலாயிருந்தால் சிவப்புக் கொடி காட்ட வேண்டும்; இரவாய் இருந்தால் சிவப்பு விளக்குக் காட்டவேண்டும். அப்போதுதான் ரயில் நிற்கும்.

இதற்கு இப்போது என்ன செய்வது? சிவப்பு விளக்குக்கு எங்கே போவது?

பசுபதிக்கு அழுகையும் ஆத்திரமுமாக வந்தது. தண்டவாளத்தின் ஓரமாய்ப் படுத்துக்கொண்டு, அவைகளை நேரே தள்ளிவைக்க முடியுமா என்று பார்த்தான். முடியவில்லை.

இந்தச் சமயத்தில், கூரான ஒரு கல் அவன் கையில் குத்திவிட்டது. உடனே இரத்தமும் வந்தது. உடனே விளக்கை அடித்துத் தன் கையைப் பார்த்தான். சிவந்த இரத்தம். செக்கச் சிவந்த இரத்தம்! அடுக்கு ரோஜாவின் மேல்பூச்சுப் போன்ற இரத்தம்!


அவன் சிரித்தான். தன்னுடைய கைக்குட்டையை எடுத்து அந்தக் கூரான கல்லை மூடினான். அதற்குமேல் தனது பூப்போன்ற கையை வைத்து அழுத்தினான்! பல்லைக் கடித்துக்கொண்டே கையை வேகமாக அழுத்தினான்! இரத்தம் பொங்கியது; பீறிட்டு அடித்தது. கைக்குட்டை முழுவதும் நனைந்து போய்விட்டது. சிரித்துக்கொண்டே அந்தச் சிவப்புக் கைக்குட்டையைப் பார்த்தான். பிறகு, அதை, தான் கொண்டுவந்த பாட்டரி விளக்கின் முன்னால் வைத்து மூடினான். அவனுக்குச் சிவப்பு விளக்குக் கிடைத்து விட்டது!

'கட, கட...குடு, குடு...ஜிகு ஜிகு!' தூரத்துப் பாலத்தில் ரயில் வரும் சப்தம் கேட்டது. பொட்டுப் போல் விளக்கும் தெரிந்தது. சத்தம் அருகில் வந்தது. நிலாப்போல் விளக்கும் பெரிதாயிற்று.

'ஜிகு, ஜிகு...ஜிகு, ஜிகு...குபு, குபு...குபு குபு'

ரயில் பக்கத்தில் வரவர பசுபதியின் நெஞ்சும் பயங்கரமாக அடித்துக்கொண்டது. இரத்தக் கைக்குட்டையால் மூடியிருக்கும் தன்னுடைய பாட்டரி விளக்கை அடித்தான்; அடித்துக்கொண்டே ஓரத்தில் நின்றான். ஆனால் ரயில் நிற்காதுபோலத் தெரிந்தது.

வேகமாக ஓடிவந்து பொறியில் விழுந்து சாக விரும்பும் மலைப் பாம்புபோல அது ஓடிவந்து கொண்டிருந்தது.




ஆயிரம் பேர்கள் அநியாயமாகச் சாவதா? அல்லது...ஒருவன் சாவதா?—பசுபதி சாகத் துணிந்து விட்டான்! ஆயிரம் உயிர்களைக் காப்பாற்ற அவன் இளம் உயிரைக் கொடுக்க முன்வந்துவிட்டான்!

தண்டவாளங்களுக்கு மத்தியில் நின்று பாட்டரி விளக்கைக் காட்டினான். நிலாவைப் போன்ற பெரிய 'சர்ச்' லைட்டுக்கு எதிரே குங்குமப் பொட்டுப்போல் பசுபதியின் சிவப்பு விளக்கு தெரிந்தது.

நல்லவேளை; டிரைவரும் இதைக் கவனித்துவிட்டார். உடனே நிறுத்த முயன்றார். ஆனால், ரயில் வண்டி உடனே நின்றுவிடுமா? 'பிரேக்'கைப் போட்டாலும் சிறிது தூரம் வந்துதானே நிற்கும்?

பசுபதி வண்டி நிற்காததைக் கண்டு, தானே அதன் முன்னால் ஓடினான்.

''நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!'' என்று கூச்சலிட்டுக்கொண்டே ஓடினான்.

கடைசியில் ரயிலும் நின்றது.

நின்றபோது அது சும்மா நிற்கவில்லை. பசுபதியை தூக்கி எறிந்துவிட்டுத்தான் நின்றது. 'ஐயோ!' என்று கத்திக்கொண்டே பசுபதி பக்கத்திலிருந்த பள்ளத்தில் விழுந்தான்.

ரயில் நின்றதும், எல்லோரும் இறங்கி வந்து அவனைச் சுற்றிக் கூடிவிட்டார்கள். பசுபதி கஷ்டத்தோடு கண்களை விழித்து விவரத்தைச் சொன்னான். அவனுக்கு வேதனை அதிகமாக இருந்தது. ஒரு காலில் பலத்த அடி.

பசுபதியை எடுத்து ரயிலில் ஏற்றிக்கொண்டார்கள். பாதையைப் பழுதுபார்த்துக்கொண்டு ரயிலை விட்டார்கள். பிறகு அவனை ஆஸ்பத்திரியில் வைத்துச் சிகிச்சை செய்தார்கள்.

பிரயாணிகளில் பலர் அவனைத் தங்கள் உயிரைக் காப்பாற்றிய உத்தமன் என்று பாராட்டினார்கள்.


அவன் படம் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளி வந்தது. அவனைப்பற்றி ஒருமுறை பிரதம மந்திரியே பெருமையாக வானொலியில் பேசினார்.

அவன் இப்போது ஒரு காலில் தழும்போடிருக்கிறன். அவனுடைய படிப்புக்குப் பணம் இப்போது அரசாங்கம் தருகிறது.

பசுபதி படித்து முடித்தவுடன் நல்ல வேலையில் அவனை அமர்த்திக் கொள்வார்கள். அவனுடைய அண்ணு பாலையாகூட இப்போது திருந்திவிட்டான். சிறைச்சாலைக்குப் போய்வந்த பிறகு, அவன் மனம் முழுதும் மாறிவிட்டது.

தன்னுடைய தழும்பு விழுந்த இடதுகாலையும், உள்ளங்கையையும் பார்க்கும்போதெல்லாம், பசுபதிக்கு அந்தச் சிவப்பு விளக்கின் நினைவு வரும்.

அந்தச் சிவப்பு விளக்குத்தானே ஆயிரம்பேரைக் காப்பாற்றியது என்று எண்ணி எண்ணி அவன் மகிழ்ச்சி அடைவான்.






மேலை நாடொன்றில் ஒரு சிற்றரசன் இருந்தான். அவன் தினந்தோறும் சாயங்கால வேளையில் அரண்மனைத் தோட்டத்தில் உலாவுவது வழக்கம்.

உலவிய பின்பு, ஒரு மரத்தடியில் வந்து அங்குள்ள புல் தரையில் உட்காருவான். அப்போது அந்த மரத்தின் மேல் இருந்து ஒரு அழகிய குயில் கூவும்.

குயிலை நீங்கள் நேரில் பார்த்திருக்கிறீர்களா? அது கூவிக் கேட்டிருக்கிறீர்களா? என்ன இன்பமாய் இருக்கும் தெரியுமா?

அந்த அரசன், நாள் தவருமல் அங்கே வந்து உட்காருவான். அந்தக் குயிலும் நாள் தவருமல் அந்த மரத்தில் இருந்துகொண்டு கூவும்.

விளக்கு வைக்கும் நேரம்வரை, அரசன் அங்கேயே இருந்துகொண்டு, அது கூவுவதைக் கேட்பான். பிறகுதான் அரண்மனைக்குப் போவான். அந்தக் குயிலின் குரலில் அவனுக்கு அவ்வளவு ஆசை!

ஒருநாள் அந்த அரசனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

'இந்தக் குயில் மாலை நேரத்தில் மட்டும்தானே கூவுகிறது? இதைப் பிடித்து நமக்கருகில் வைத்துக் கொண்டால் எப்போதும் கூவுமே' என்று நினைத்தான்.

உடனே தன் தோட்டக்காரனைவிட்டு அதைப் பிடித்துவரச் செய்தான். அதை ஒரு தங்கக் கூட்டுக்குள் அதைத்து வைத்து, பாலும் பழமும் அதற்கு உணவாக வைத்தான்.

ஆனால் கூண்டுக்குள் இருந்த குயில், அரசனை வருத்தத்தோடு பார்த்தது. பழத்தைத் தொடவும் இல்லை; பாலைக் குடிக்கவும் இல்லை.

உண்ணவே மறுத்தபோது அது எங்கே பாடப் போகிறது?

அரசன், பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தான். சாப்பிட்டுவிட்டுக் குயில் மகிழ்ச்சியோடு பாடும் என்று நினைத்தான்.

தங்கக் கூண்டையும், பாலையும் பழத்தையும் கண்டு அதற்கு ஆனந்தம் உண்டாகும் என்று பார்த்தான். ஊஹூம், குயில் வாயைத் திறக்கவே இல்லை.

ஒன்று, இரண்டு, மூன்று நாட்கள் சென்றன. குயில் இன்னும் பட்டினிதான். பாடவுமில்லை; தன் தலையைத் தூக்கவுமில்லை. அரசன் தன் மந்திரியைக் கூப்பிட்டு யோசனை கேட்டான்.

"கூண்டுக் குயில் பாடாது. கவலையில்லாமல் மரத்துக்கு மரம், கிளைக்குக் கிளை பறந்து திரியும் பறவையை நீங்கள் கூண்டுக்குள் அடைத்துவைத்தால் அதற்கு ஆனந்தம் பிறக்குமா? ஓடி ஆடித்திரியும் மனிதனைச் சிறைக்குள் போட்டால், அவன் எப்படி இருப்பான்? அதுபோலத்தான் இப்போது இந்தக் குயிலும் சிரமப் படுகிறது. பாவம்! இது இப்படியே இருந்தால், பசியாலும் கவலையாலும் செத்துப் போய்விடும். இதை விட்டு விடுவதே நல்லது" என்று மந்திரி பதிலளித்தான்.



அரசனுக்குஅதைவிட்டுப் பிரியவே மனம் இல்லை. ஆனாலும் பாடாத குயிலை வைத்துக் கொண்டு என்ன செய்வது? திறந்து விட்டுவிட்டான். குயில் அவனை நன்றியோடு பார்த்துவிட்டுச் சிறகடித்துச் சென்றது. திரும்பவும் தோட்டத்து மரத்துக்கே பறந்தது.

அன்று மாலை அரசன் தோட்டத்திற்கு உலாவச் சென்றான். என்ன ஆச்சரியம்! தோட்டத்தில் அந்தக் குயில் உல்லாசமாக இன்குரல் எழுப்பிக் கூவிக்கொண் டிருந்தது.

இப்பொழுது இது சுதந்தரக் குயில் அல்லவா?



# உயர்ந்த நண்பன்

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு நான் என்னுடைய கிராமத்தில் நாலாவதோ ஐந்தாவதோ படித்து வந்தேன்.

நான் படித்த பள்ளிக்கூடம் மிகச் சிறியது. என்னுடைய வகுப்பில் பதினைந்து பதினாறு பேர்கள்தான் இருந்தார்கள்.

எங்கள் வகுப்பில் கோவிந்தன் என்று ஒரு வண்ணாரப் பையன் படித்து வந்தான். அவனை மட்டிலும் ஒரு மூலையில் தனியாக உட்கார வைத்திருந்தார் எங்கள் உபாத்தியாயர்.

மற்ற பையன்கள் எல்லாரும் நீட்டமான பெஞ்சுகளில் ஒன்றாகச் சேர்ந்திருந்தோம். எங்களுக்காக மூன்று பெஞ்சுகள் இருந்தன. கோவிந்தனுக்கு மாத்திரம் தனியாக ஒரு சிறு பலகை போட்டிருந்தார்கள்.

கோவிந்தனின் முகம் எப்போதும் வாடியிருக்கும். அவன் அதிகமாகச் சிரிப்பதே கிடையாது.

அவனைச் சொல்லிக் குற்றமில்லை. அவன்தான் என்ன செய்வான்? மற்ற பிள்ளைகள் யாராவது முகம் கொடுத்துப் பேசினால்தானே அவன் கலகலப்பாகப் பழகுவான்?

ஆசிரியர் இல்லாத சமயங்களில் நாங்கள் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக்கொள்வோம்; ஒருவரை

ஒருவர் கிள்ளிக் கொள்ளுவோம். குட்டிக் கொள்ளு வோம். விளையாடுவோம்.

ஆனால் ஒருவரும் எங்களில் ஒருவனாகக் கோவிந்தனை மதிப்பது கிடையாது. அவனோடு நாங்கள் சண்டையிடுவதும் இல்லை; சந்தோஷமாக இருப்பதும் இல்லை.




கோவிந்தனை தாழ்ந்த சாதிக்காரன் என்று நாங்கள் அப்போது நினைத்தோம். எங்களுடைய ஆசிரியரும் நினைத்தார். எங்களுடைய அப்பா, அம்மாவும் நினைத்தார்கள்.

எங்கள் பள்ளிக்கூடத்திற்கு ஒருநாள் திருச்சியிலிருந்து இன்ஸ்பெக்டர் வந்தார். வழக்கமாக அங்கு அடிக்கடி வரும் இன்ஸ்பெக்டர் அல்ல அவர். புதிதாகச் சென்னையிலிருந்து திருச்சிக்கு வந்தவராம். வயது அதிகமாக ஆகியிருந்தது. தலையெல்லாம் பஞ்சுபோல் நரைத்திருந்தது. கையில் ஓர் அழகான பிரம்பு வைத்திருந்தார். ஆனால் அந்தப் பிரம்பால் எங்களில் யாரையும் அடிக்கவில்லை!


வந்தவுடன் அவர் கோவிந்தனையே உற்றுப் பார்த்தார். "ஏன், நீ இங்கே தனியாக உட்கார்ந்திருக்கிறாய்?" என்று கேட்டார்.

"நான் வண்ணாரப் பையன்" என்றான் கோவிந்தன்.

"இருந்தால் என்ன? அங்கே போய் மற்றவர்களுடன் பெஞ்சியில் உட்கார்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"அவர்கள் இடம் விடமாட்டார்கள். நான் தாழ்ந்த சாதி" என்றான் கோவிந்தன்.

இன்ஸ்பெக்டரின் முகம் வாட்டமடைந்தது. சிறிதுநேரம் மேசையில் கையை ஊன்றிக்கொண்டு எங்கள் எல்லாரையும் சுற்றிப் பார்த்தார். எங்கள் ஆசிரியரிடம் என்னவோ பேசினார். பிறகு கோவிந்தனை அருகில் அழைத்து அவன் தலையை அன்போடு தடவிக்கொடுத்தார்.



எங்களுக்கு இது ஆச்சரியமாக இருந்தது. அவனைப் போய்க் கையால் தொட்டுத் தடவிக்கொடுக்கிறாரே! தீட்டு வந்துவிடாதா?

"சாதியில் உயர்வு தாழ்வு இல்லை. செய்யும் தொழிலில் உயர்வு தாழ்வு கிடையாது. துணியில்

உள்ள அழுக்கை நீக்குபவர் வண்ணார் என்றால் உங்கள் மனத்திலுள்ள அழுக்கை நீக்கும் உங்கள் உபாத்தியாயரும் ஒருவகை வண்ணார்தாம். ஆகையால் இனிமேல் சாதி வேற்றுமை பாராட்டாதீர்கள். இவனுக்கு இடங் கொடுங்கள்'' என்றார்.

எனக்கு அவர் பேசியது உருக்கமாக இருந்தது. அது உண்மை என்றும் தோன்றியது. உடனே கொஞ்சம் ஒதுங்கிக்கொண்டு அவனுக்கு என் அருகில் இடம் கொடுத்தேன்.

அதுமுதல் நானும் கோவிந்தனும் நெருங்கிய நண்பர்கள் ஆகிட்டோம்.

எனக்கு இன்னொருபுறம் இருந்த ரங்கனுக்கு மாத்திரம் எங்கள் நட்புப் பிடிக்கவில்லை. ரங்கன் எனக்குத் தூரத்துச் சொந்தக்காரன். அந்தக் கிராமத்து கணக்கப்பிள்ளையின் மகன்.

ஆண்டுகள் பல சென்றன. நாங்கள் அந்த ஊரை விட்டே வந்துவிட்டோம்.

நான் திருச்சியிலும், சென்னையிலும் படித்தேன். எனக்குக் கல்யாணமாகிக் குழந்தைகளும் பிறந்துவிட்டன. எனக்குச் சென்னையில் வேலை.

மூன்று நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நாங்கள் கிராமத்துக்குப் போவோம். அங்கே போய் ஒருநாள் மட்டும் தங்கி, அங்குள்ள கோவிலில் சுவாமியைத் தரிசித்துவிட்டுத் திரும்புவோம். என்னுடைய தாயாருக்கு அந்தக் கோவிலில் உள்ள சுவாமியிடம் அதிக பக்தி; எனக்குந்தான்.

எத்தனையோ தலைமுறைகளாக என்னுடைய மூதாதையர்கள் வழிபட்ட கோவில் அல்லவா?

என்னுடைய பள்ளித் தோழர்களில் இரண்டே இரண்டு பேர் மாத்திரம் இப்போது கிராமத்தில் இருந்தார்கள்.

ஒருவன் கணக்கப்பிள்ளை மகனான ரங்கன்; இன்னொருவன் வண்ணாரக் கோவிந்தன்.

ரங்கன் இப்போது அங்கே கணக்கப்பிள்ளையாக இருந்தான். அவன் வீட்டில்தான் நான் வரும் போதெல்லாம் வழக்கமாகத் தங்கினேன். அவனுக்கு இப்போது அந்தக் கிராமத்தில் நிறைய நிலபுலங்களும் செல்வமும், செல்வாக்கும் இருந்தன. கிராமத்துப் பணக்காரர்களில் அவன் ஒருவனாக விளங்கினான்.

நான் அங்கே போனபோதெல்லாம் என்னைக் கோவிந்தன் மறக்காமல் வந்து பார்த்தான். அவனுடைய தகப்பனார் இறந்துவிட்டதால் அவன்தான் அந்தக் கிராமம் முழுவதற்கும் சலவை செய்து கொண்டிருந்தான்.

நான் அந்தக் கிராமத்தில் தங்குகிற ஒருநாள் மட்டிலும், அவன் தன் வேலைகளைக் கவனிப்பதில்லை. பெரும் பொழுது என்னுடனேயே இருந்து எனக்கும் என் குடும்பத்துக்கும் வேண்டிய உதவிகளைச் செய்வான்.

இந்த முறை கோவிலுக்குப்போன சமயம் எனக்கு ஒரு சிறு கஷ்டம் வந்துவிட்டது.

என் சட்டையிலிருந்த பணப்பை நூறு ரூபாய் நோட்டோடு ரங்கன் வீட்டுக் கிணற்றுக்குள் விழுந்து விட்டது.

கிணற்றுக்குள் ஆட்களை இறங்கச் சொல்லிப் பணத்தைத் தேடினேன். கிடைக்கவில்லை. வெகு ஆழமான அந்தக் கிணற்றில் எங்கோ ஒரு மூலைக்குள் சென்று மறைந்தது பணப்பை.

ஊருக்குக் கிளம்பும் சமயத்தில் இந்த மாதிரி நடந்துவிட்டது. வேறு பணம் என்னிடம் இல்லை.

நான் மறுநாள் காலையில் சென்னைக்கு வந்து வேலையை ஒப்புக்கொள்ள வேண்டும். பணத்திற்கு என்ன செய்வது?

பணம் இல்லாமல் நானும் என் குடும்பமும் சென்னைக்குப் புறப்பட முடியுமா?

ரங்கன்தான் பணக்காரன் ஆயிற்றே! தூரத்துச் சொந்தக்காரன் வேறு. ஆகையால் அவன் எனக்குப் பணம் கொடுப்பானென்று நினைத்தேன்.

அவனைக் கடன் கேட்டேன். ஊருக்குப் போனவுடன் அனுப்புவதாகச் சொன்னேன். ''பணமா? என்னிடம் இப்போது காலணுக்கூடக் கிடையாது'' என்றான் ரங்கன்.

''ஊருக்குப் போகவேண்டும்'' என்றேன்.

''என்னிடம் பணம் இல்லை. உன் மனைவியின் நகைகளில் ஒன்றை வாங்கிக்கொடு. யாரிடமாவது விற்றுப் பணம் வாங்கித் தருகிறேன்'' என்றான்.

அவன் இவ்வளவு இரக்கமற்றவனாக இருப்பானென்று நான் ஒருநாளும் நினைத்ததில்லை. பெட்டி

நிறையப் பணத்தை வைத்துக்கொண்டு இப்படியா ஒருவன் ஆபத்துக் காலத்தில் பொய் சொல்லுவான்?

“நாமாக விற்கப் போனால் பாதிப் பணந்தான் கொடுப்பார்கள். என்ன செய்வது? உனக்கோ அவசரம்; வேறு வழியில்லை. நகையை வாங்கிக் கொடு” என்றான்.

என்னுடைய கஷ்டத்தை உபயோகித்து அவன் லாபம் சம்பாதிக்க விரும்பினான். தானே இப்படி ஒரு பொய்யைச் சொல்லி என்னுடைய நகையைப் பாதி விலைக்கு வாங்க ஆசைப்பட்டான்.

எனக்கும் அவனைவிட்டால் வேறு வழியில்லை. ஆசையோடு அவள் செய்து போட்டுக்கொண்ட சங்கிலியைக் கழற்றச் சொன்னபோது என்மனைவியின் கண்கள் கலங்கின.

இப்போது கோவிந்தனுக்கு விவரம் தெரிந்தது. வந்து, “நகையைக் கழற்றச் சொல்லாதீர்கள்” என்றான்.

“வேறு வழியில்லை” என்றேன். “வழி இருக்கிறது; கொஞ்சம் பொறுங்கள்” என்று சொல்லிவிட்டு எங்கோ வேகமாய்ப் போனான்.

அரைமணி நேரத்துக்கெல்லாம் ஒரு மண் கலயத்துடன் அவன் என்னை நோக்கி வருவது தெரிந்தது. எனக்கு வியப்பாக இருந்தது. அந்த மண் கலயத்திற்குள் அப்படி என்ன இருக்கும்?

கலயத்தை என் எதிரே தலைகீழாகக் கொட்டினான். அதிலிருந்து வெள்ளி நாணயங்களும், நிக்கல் நாணயங்களும், செப்புக் காசுகளும் உருண்டன.

அவனும் நானும் அந்தப் பணத்தை எண்ணினேம். தொண்ணூறு ரூபாய்க்குக் கொஞ்சம் குறைவாக இருந்தது.

''என் தங்கச்சி கல்யாணத்திற்கு இதைச்சேர்த்து வைத்தேன்'' என்றுன் கோவிந்தன்.

''இதை நீங்கள் மறுக்காமல் எடுத்துக்கொள்ள வேண்டும். தை மாதம்தான் கல்யாணம். அதற்குள் எப்படியோ நான் பார்த்துக்கொள்கிறேன்'' என்றுன்.

அவனுடைய அன்பு என் கண்களில் நீரை வர வழைத்தது.

''வேண்டாம் கோவிந்தா! நீ கஷ்டப்பட்டுப் பல நாள் சேர்த்ததை இப்படி எனக்குக் கொடுக்க வேண்டாம். நகை போனுல் போகிறது. ரங்கனிடமே ஏற்பாடு செய்துகொள்கிறேன்'' என்றேன்.

''முடியாது! நான் கஷ்டப்பட்டுத்தான் சேர்த்து வைத்தேன். ஆனுல் உங்களுக்கு இதைக் கொடுப்பதால் என் கஷ்டம் மறைந்துபோய் ஆனந்தம் வருகிறது. இந்த ஆனந்தத்தை நீங்கள் தடுக்கவேண்டாம். உங்களுக்கு இந்தச் சமயத்தில் இதைக் கொடுப்பது என் தங்கச்சி கல்யாணத்தைவிட முக்கியமானது'' என்றுன் கோவிந்தன்.

நான் அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டேன்.

''உடனே திருப்பி அனுப்புகிறேன். உன் தங்கை கல்யாணத்தின்போது எனக்குக் கடிதம் எழுது. கல்யாணச் சாப்பாட்டுக்கு அவசியம் வந்து விடுகிறேன். மறக்காமல் எழுதுகிருயா?'' என்றேன்.

''உண்மைதானு? என் வீட்டில் சாப்பிடுவீர்களா?'' என்றுன் கோவிந்தன்.


''எல்லோர் வீட்டிலும் நான் சாப்பிடுவேன். அதிலும் உன் வீட்டில் சாப்பிடுவதை நான் பெருமை யாக நினைப்பேன்'' ன்ன்றேன்.

''நீங்கள் பணம் அனுப்பவேண்டாம். கல்யாணத் துக்கு வருவீர்களா'' என்று மீண்டும் சந்தேகத்துடன் கேட்டான் கோவிந்தன்.

பிறகு நான் சென்னைக்கு வந்துவிட்டேன். அவனுடைய பணத்தையும் உடனே அனுப்பியாகி விட்டது. அவன் தங்கையின் கல்யாணத்தை எதிர் பார்த்திருக்கிறேன்.

சாதி, பணம், பதவி இவற்றினுல் மட்டும் உயர்ந் தவர்கள் உண்மையில் உயர்ந்த மனிதர்களே அல்ல. அன்பிலும், குணத்திலும் உயர்ந்தவர்களே நல்ல மனிதர்கள்.

கூரைக் குடிசையிலே கூழைக் குடித்துக்கொண்டு தினந்தோடும் மாடாக உழைக்கும் அந்தக் கோவிந்த னின் அன்பை நினைக்கும்போதெல்லாம் அது எனக்கு இன்பம் தருகிறது.



DR. T. V. S. M. LIBRARY.
MADURAI KAMARAJ UNIVERSITY.